# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

CPIML LIBERATION

2023 ஏப்ரல் 16-30 தொகுதி 21 இதழ் 17

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

## டாக்டர் அம்பேத்கரின் 133வது பிறந்தநாள் - ஏப்ரல் 14



## ஊர் தோறும் ஊராட்சி தோறும் மக்களிடம் செல்வோம்

## கட்சி துவக்க நாள் உறுதிமொழி

ஏப்ரல் 22, 2023 இகக(மாலெ) தோற்று -விக்கப்பட்டதன் 54வது ஆண்டு. இந்த தருணத்தில், தோழர் சாருமஜூம்தாருக்கும் கட்சியை தோற்றுவித்த மற்ற தலைவர்களுக்கும் கட்சியை வலுப்படுத்தவும் புரட்சிகர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லவும் கடந்த 54 ஆண்டு களாக தங்களது அனைத்தையும் தியாகம் செய்தவர்களுக்கும் புரட்சிகர அஞ்சலியை செலுத்துகிறோம். ஏப்ரல் 22, உலகின் முதல் சோசலிச புரட்சியின் முதன்மை சிற்பியும் மார்க்ஸ் எங்கல்சுக்குப் பிறகு மார்க்சிய தத்துவம், நடைமுறையின் ஆகச் சிறந்த பிரதிநிதியுமான தோழர் லெனினது பிறந்த நாளுமாகும்.

தோழர் லெனினுக்கு வணக்கம் செலுத்து கிறோம், அவரின் மாபெரும் புரட்சிகர மரபை உயர்த்திப் பிடிக்க உறுதி கொள்கிறோம்.

பாட்னாவில் வெற்றிகரமாக நடைபெற்ற கட்சியின் 11வது காங்கிரசைத் தொடர்ந்து, 'பாசிசத்தை தோற்கடிப்போம்; தியாகிகள் கனவு கண்ட இந்தியாவைக் கட்டமைப்போம்' எனும் காங்கிரசின் எழுச்சி முழக்கத்தை செயல்படுத்தும் கடமை ஒட்டு மொத்த கட்சியின் முன் உள்ளது.

கட்சி துவக்க நாளில், ஒவ்வொரு கட்சிக் கிளையின் பாத்திரத்தை அதிகரிப்பதன் மூலமும் அனைத்து முனைகளிலும் கட்சியை விரிவுபடுத் துவதன் மூலமும் கட்சியை வலுப்படுத்த உறுதி கொள்கிறோம். ஒவ்வொரு கட்சிக் கிளை, உள்ளூர் கமிட்டியின் அதிகரித்த வலுவும் பாத்திரமும்தான் பாசிச தாக்குதலை எதிர்த்துப் போராடும் கட்சியின் திறனை உயர்த்துவதற்கான திறவுகோலாகும்.

மோடி-அதானி கூட்டு அம்பலப்பட்டு வருவதாலும் விலை உயர்வுக்கு எதிராக, வேலையின்மை, ஒடுக்குமுறை புல்டோசர் ஆட்சிக்கு எதிராக மக்களது கோபம் அதிகரித்து வருவதாலும் கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் மோடி அரசாங்கமும் சங்க் பரிவாரமும் அதிகரித்த அளவில் மூர்க்கமடைந்து வருகின்றன. இந்த நெருக்கடியிலிருந்து வெளியே வர, மீண்டும் ஒருமுறை மதவாத வெறியை உசுப்பி விடுவதன் மூலம், பாஜக தனது பாசிச பயணத்தில் இளைஞர்களையும் ஒடுக்கப்பட்ட மக்களையும் தனது காலாள் படையாக்கிக் கொள்ள முயன்று வருகிறது. இந்த பிரித்தாளும் ஆட்டத்தின் கேடுகெட்ட முகத்தை சமீபத்திய ராம் நவமியின் போது பார்த்தோம். அதே சமயம், மோடி ஆட்சி எதிர்க்கட்சியை ஒடுக்கவும் நீதித்துறை உள்ளிட்ட ஜனநாயகத்தின் அனைத்து நிறுவனங்களையும் கடத்திச் செல்லவும் குடிமக்களின் ஒவ்வொரு அரசமைப்புச்சட்ட உரிமைகளைக் கட்டுப்படுத்தி டவும் முழுமூச்சாக இறங்கியுள்ளது.

எனவே, அனைத்து பிரிவு மக்கள் மத்தியிலும் மத, மொழி வேறுபாடுகளையும் ஊடறுத்து, ஒற்றுமை, ஒருமைப்பாடு பிணைப்புகளை வலுப்படுத்த வேண்டியது மிக முக்கியமானது.

தொழிலாளர், விவசாயிகள், ஆண்கள், பெண்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள் அனை வரும் ஒருவரோடு ஒருவராக ஒன்றாக சேர்ந்து நின்று, பாசிசத்தை தோற்கடிக்க, ஒன்றுபட்டுப் போராடி, ஜனநாயகத்தை பாதுகாக்க, இந்தியாவை பாதுகாக்க முன்வர வேண்டும். 2023 நெடுக, தொடர்ச்சியான, முக்கியமான சட்டப்பேரவைத் தேர்தல்களும் அடுத்த ஆண்டின் துவக்கத்தில் மிக முக்கியமான மக்களவைத் தேர்தலும் நடக்க உள்ளன. இந்த அனைத்து தேர்தல்களிலும் பாஜக தோற்கடிக்கப்பட வேண்டும், வலுவிழக்கச் செய்யப்பட வேண்டும். அடுத்த மக்களவையில் புரட்சிகர இடது இடம் பெறுவதை உறுதி செய்திட தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப் படவும் வேண்டும்.

நமது தியாகிகள், மறைந்த தோழர்கள் அனைவருக்கும் செவ்வணக்கம்.

இகக(மாலெ)வை வலுப்படுத்துவோம்; பாசிச எதிர்ப்பு பரந்துபட்ட மக்கள் ஒற்றுமையைக் கட்டமைப்போம்.

போராடுவோம், வெற்றி பெறுவோம்!

**மத்தியக் கமிட்டி,**
**இகக(மாலெ) விடுதலை**

2023 ஏப்ரல் 16-30

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 21 இதழ் 17

## உள்ளே


| | |
|---|---|
| மே நாள் அறைகூவல் | 4 |
| ஊர் தோறும் ஊராட்சி தோறும் மக்களிடம் | 7 |
| தமிழ்நாடு அரசின் வேளாண் பட்ஜெட் | 10 |
| சாத்தியமற்ற தொலைதூர வாக்களிப்புத் திட்டம் | 13 |
| கனியாமூர் வேங்கைவயல் அம்பை உடன்குடி | 15 |
| மதுச்சேரியை மாற்றப் போராடுவோம் | 19 |


**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**

**பாலசுந்தரம்**

**பழ.ஆசைத்தம்பி**

**அ.சந்திரமோகன்**

**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**

**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி : 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com



**தலையங்கம்**

# பாசிச பாஜகவின் காட்டு தர்பார்

*ஏப்ரல் 15 அன்று தொலைக்காட்சியில் ஒளிபரப்பு நடந்து கொண்டிருக்க, பிரயாக்ராஜ் மாவட்டத்தின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அத்திக் அகமது மற்றும் அவரது சகோதரர் அஸ்ரப் அகமது இருவரும் தண்டனைக் கைதிகளாக போலீஸார் புடை சூழ கையில் விலங்குடன் அழைத்துச் செல்லப்படும்போது, அவர்களுக்கு மிக அருகில் வந்து சங் பரிவார் குண்டர்கள் அவர்களைச் சுட்டுக் கொல்கிறார்கள். அவர்களைக் கொல்லும் போது ஜெய் ஸ்ரீராம் என்று முழக்கமிடுகிறார்கள். அவர்கள் இருவரும் இறக்கும் வரை சுடுகிறார்கள். அதை போலீஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நடப்பதையெல்லாம் அப்படியே தொலைக்காட்சியில் உலகெங்கும் உள்ளவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்கு தெரிந்தே இந்தப் படுகொலையை அரங்கேற்றினார்கள் சங்பரிவார் குண்டர்கள். உத்தரபிரதேசத்தில் யோகி ஆதித்யாநாத் முதல்வர் ஆன பின்பு போலி மோதல்களின் எண்ணிக்கை அதிகரித்தது. குற்றவாளிகளை என்கவுண்டரில் கொல்லலாம் என்றார் யோகி. குற்றவாளிகள் என்று சொல்லப்படுபவர்களை காவல்துறை என்கவுண்டரில் கொல்வது என்பதை விட, சங்பரிவார் கும்பல்கள் எந்த விதமான அச்ச உணர்வும் இன்றி, வெளிப்படையாகவே கொலை செய்கிறார்கள். பாஜகவின் யோகி ஆதித்யாநாத் ஆளும் உத்தரப்பிரதேசத்தில், சட்டத்தின் ஆட்சி என்பது முற்றிலும் இல்லை என்றே சொல்ல வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்புதான் அத்திக் அகமதுவின் மகன் அசாதை போலீஸார் என்கவுண்டரில் கொன்றார்கள். குற்றங்கள் குறைய வேண்டும் என்றால் என்கவுண்டர்தான் சர்வரோக நிவாரணி என்கிறார் சாத்வீகத்தைப் போதிப்பதாகச் சொல்லும், காவி உடை தரித்த யோகி. அவர் வெளிப்படையாகவே அத்திக் அகமதுவை மிரட்டினார். அதனால், அத்திக் அகமது உச்சநீதிமன்றத்தில், தனக்கு பாதுகாப்பு வேண்டும் என்று முறையிட்டார். அத்திக் அகமதுவின் வழக்கறிஞர், குஜராத்தில் இருந்து உத்தரப் பிரதேசத்திற்கு அத்திக்கைக் கொண்டு வந்தால் அது அத்திக்கிற்கு மரணத்திற்கான அழைப்பாணையாக இருக்கும் என்று கூறினார். உச்ச நீதிமன்றமோ, அத்திக் ஏற்கனவே காவல்துறையின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறார் அதனால், அரசாங்கம் அவரைக் கவனித்துக் கொள்ளும் என்று வாய் மொழியாகச் சொன்னது. சொன்னதுபோலவே காவலர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் போது அத்திக்கும் அஸ்ரப்பும் கவனிக்கப்பட்டுவிட்டார்கள். அத்திக் போல, ஆதித்யாநாத்தும் ஒரு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர். யோகி 2006ல் கோரக்பூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜியிடம் தனக்கு உத்தரப்பிரதேசத்தில் அச்சுறுத்தல் இருக்கிறது, பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டார். அவர் இப்போது முதல்வர் பதவியில் இருந்து மற்றொரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரைக் கொன்றுள்ளார். உத்தரப்பிரதேச அரசு ஆவணங்களின்படி 2017ல் 1038 பேர் என்கவுண்டரில் கொல்லப்பட்டுள்ளார்கள். சிறையில் இருப்பவர்கள் விடுதலை செய்யப்பட்டு ஒரு வாரத்திற்குப் பின்னர் என்கவுண்டரில் கொல்லப்படுகிறார்கள். இதில் அதிகம் கொல்லப்படுபவர்கள் இஸ்லாமியர்கள்தான். அத்திக், அஸ்ரப் இருவரும் பல குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்று அவர்களின் கொலைக்கு நியாயம் கற்பிக்கப்படுகிறது. யாரையும் எவரும் கொன்று அழிக்கலாம் என்றால், சட்டம், நீதிமன்றம், காவல்துறை எல்லாம் எதற்கு? அவையெல்லாம் ஆட்சி அதிகாரத்தில் இருக்கிற காவிப் பாசிச பாஜகவினரைப் பாதுகாப்பதற்கு மட்டும்தானா? காவலர்களின் கட்டுப்பாட்டில் இருப்பவருக்கே இந்த முடிவு என்றால், எளிய மக்களின் நிலை என்னவாகும். பாசிச பாஜகவின் காட்டு தர்பார் மக்களால் முறியடிக்கப்பட வேண்டும். இல்லையென்றால், மனிதத் தன்மையற்றவர்கள் மட்டுமே நாட்டில் மிஞ்சியிருப்பார்கள். ❑*

# இந்திய மே நாள் நூறாண்டு நிறைவு!

- **வேலை, கூலி, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக, அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராகப் போராடுவோம்!**
- **தொழிலாளர் விரோத பிஜேபியை 2024ல் தோற்கடிப்போம்!**
- **சிங்கார வேலர் ஏற்றிய மே நாள் செங்கொடியை உயர்த்திப் பிடிப்போம்!**

*இந்தியாவிலேயே முதல் மே நாள் கொடி ஏற்றப்பட்டது சென்னை மெரீனா கடற்கரையில்தான். மே 1, 1923 அன்று, தோழர் சிங்காரவேலரால் சென்னையில் முதல் மே நாள் கொடி ஏற்றப்பட்டது. அதே போல, சென்னையில்தான் முதல் தொழிற்சங்கமும் தோழர் சிங்காரவேலரால் துவக்கப்பட்டது. 2023ல் இந்திய தொழிலாளர் வர்க்கம் அனுசரிக்கும் மே முதல் நாள், மே நாள் கொண்டாட்டத்தின், மே நாள் சூளுரையின் ஒரு நூற்றாண்டு நிறைவைக் குறிப்பதாகும்.*

*மே நாள், 8 மணி நேர வேலைக்காக தொழிலாளர்கள் தமது உயிரைத் துறந்த தியாகத்தின் நாள்! பின்னர், எட்டு மணி நேர வேலையை சட்டமாக, உரிமையாக உலகத் தொழிலாளர் வர்க்கம் வென்றெடுத்ததைக் குறிக்கும் நாள். ஆனால், இந்திய தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு நூற்றாண்டு கால தியாகத்தால் வென்றெடுக்கப்பட்ட சட்டங்களை மோடியின் பிஜேபி அரசு தட்டிப்பறிக்கிறது. 12 மணி நேர வேலை என்பது பிஜேபி ஆட்சியிலிருக்கும் மாநிலங்களில் சட்டமாக்கப்பட்டு விட்டது. ஏப்ரல் முதல் நாள் அன்று நாடு முழுக்க அந்த தொழிலாளர் விரோத சட்டத் தொகுப்புகளை நடைமுறைக்குக் கொண்டு வந்து, தனது கார்ப்பரேட் முதலாளிகள் விசுவாசத்தைக் காட்டிடத் துடித்த ஆர்எஸ்எஸ்-பிஜேபி மோடி அரசு, இந்திய தொழிலாளர் வர்க்கத்தின் தொய்வற்ற தொடர் போராட்டம் காரணமாகவும், அதை நடைமுறைப்படுத்தினால், 2024ல் தோற்றுப் போய்விடுவோமோ என்ற பயத்தின் காரணமாகவும் தற்காலிகமாக அதை அமுல்படுத்துவதை ஒத்தி வைத்திருக்கிறது.*

தொழிற்சாலைகள் சட்டத் திருத்த மசோதவை தமிழ்நாடு அரசு உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும்!

*மோடியின் கடந்த 9 ஆண்டு கால ஆட்சியில் தொழிலாளர் வர்க்கத்துக்கு இழைத்த கொடுமைகள், துரோகங்கள் எண்ணற்றவை. கொரோனா ஒரு வரப்பிரசாதமாக பிஜேபிக்கு கிடைத்து விட்டதால், கொரானாவைக் காரணம் காட்டி, தொழிலாளர் விரோதச் சட்டங்களை நிறைவேற்றி விட்டது. அவற்றை நடைமுறைப்படுத்தும் நாளுக்காக காத்துக் கொண்டிருக்கிறது.*

*கடந்த 9 ஆண்டுகளில் தொழிலாளர்களின் அனைத்து உரிமைகளும் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. 8 மணி நேர வேலை என்பது 12 மணி நேரமாகி விட்டது. 300க்கும் குறைவான தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு எந்த சட்டப் பாதுகாப்பும் இல்லை என்றாகி விட்டது. தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதும் வேலை*

யிலிருந்து துரத்துவதும் முதலாளிகளுக்கு மிக எளிதாகிவிட்டது. எந்தவொரு பாதுகாப்பு வளையங்களும் உருவாக்கப்படாமலே, பெண்கள் இரவு நேரப் பணியாற்ற வேண்டும் என்பது சட்டமாகி வருகிறது.

சட்டப்படி கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய மருத்துவப் பாதுகாப்பு (இஎஸ்ஐ) தற்போது தனியார் காப்பீடுத் திட்டமாக மாற்றப்பட்டு வருகிறது. அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர்களையும் சட்டப் பாதுகாப்புக் குள் கொண்டு வருவதாக தம்பட்டம் அடிக்கும் மோடி அரசு, இன்சூரன்ஸ் திட்டங்களைத்தான் மருத்துவத் திட்டம் என ஏமாற்றுகிறது. ஒரு தொழிலாளி எவ்வளவு பணம் இன்சூரன்சில் கட்டுவாரோ அவ்வளவுதான் பயன் கிடைக்கும். அநியாயம் என்னவென்றால், தொழில் நடத்துவது எமது தொழில் அல்ல என சொல்லும் அதே மோடி அரசு, புதிய சட்டங்களின் மூலம் இன்சூரன்ஸ் ஏஜெண்டாக மட்டும் செயல்படுகிறது. அதன் மூலம், சமூகப் பாதுகாப்புக்கு, தொழிலாளர்களுக்கு, அவர்களது உழைப்பால் கொழுத்த அந்த முதலாளிகள் பொறுப்பல்ல, வாரியங்களே பொறுப்பு. வாரியங்கள் அறிவிக்கும் இன்சூரன்ஸ் திட்டங்களுக்கு தொழிலாளர் செலுத்தும் பணத்தின் அளவே பொறுப்பு என்கிறது. இதன் மூலம் இ.எஸ்.ஐ, பி.எப், பணிக்கொடை உள்ளிட்ட அனைத்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கும் தொழிலாளர்களே பொறுப்பு என்கிறது பிஜேபி அரசு.

நாடு முழுவதும் அரசு ஊழியர்கள் பழைய பென்சன் திட்டம் வேண்டும், புதிய பென்சன் திட்டம் வேண்டாம் என போராடி வருகிறார்கள். ஆனால், பழைய பென்சன் திட்டம் வழங்க முடியாது என்கிறது மோடி அரசு. மோடியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி திமுகவின் நிதி அமைச்சரும், தமது தேர்தல் வாக்குறுதியான பழைய பென்சன் திட்டத்தைக் கொண்டுவர முடியாது என்கிறார்.

"வேலை இல்லாத் திண்டாட்டம் மட்டுமல்ல, ஊதியமும் கூட தொழிலாளர்களின் மிகப் பெரும் கவலையே" என்கிறார் பொருளாதார நிபுணர் ஜீன் டெரஸ். "2014 முதல் 2022 வரையிலான மோடி ஆட்சியின் 8 ஆண்டுகளைக் கணக்கிட்டுப்பார்த்தால், தொழிலாளர் ஊதியம் பெருமளவு வீழ்ச்சி அடைந்து இருக்கிறது. உண்மை ஊதியத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், ஊதியத்தை அதிகரித் திருப்பதாக சொல்லப்படும் துறையின் தொழிலாளர்களுக்கும் அது மிக அற்பமாகவே இருக்கிறது. விவசாயத் தொழிலாளர் ஊதியம் 0.9 சதவீதமும் கட்டடத் தொழிலாளர் ஊதியம் 0.2 சதவீதமும் விவசாய மல்லாத தொழில் செய்யும் தொழிலாளர் ஊதியம் வெறும் 0.3 சதவீதமும் மட்டுமே அதிகரித்து இருக்கிறது" என்கிறார். சரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால், கட்டடத் தொழிலாளர்களின் உண்மை ஊதியம் கடும் வீழ்ச்சி அடைந்து இருக்கிறது என்கிறார்.

வேலையில்லாத் திண்டாட்டம் மிகப்பெரும் பிரச்சனையாக இருந்து வருகிறது. படித்து முடித்த வேலையில்லாப் பட்டாளமும் பெருகிக் கொண்டே இருக்கிறது. இந்திய நாட்டின் பெரிய வளம் மனித வளம் என்றால் அதை மலிவான விலையில் முதலாளிகளுக்கு கிடைக்கச் செய்வதற்கான திட்டங்களையே மோடி தீட்டி வருகிறாரே தவிர அந்த மனிதர்கள் வளம் பெறுவது பற்றி அவருக்குக் கிஞ்சித்தும் கவலையே இல்லை. ஜீன் டெரஸ் கூறுவது போல, பிஜேபி அரசு பட்ஜெட்டுக்கு முன்னால் வெளியிட்டிருக்கும் 200 பக்க பொருளாதார சர்வே தொழிலாளர்கள், அவர்கள் நிலைமை, ஊதியம் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவே இல்லை.

பிஜேபி அரசின் தொலைநோக்குப் பார்வையில், நிரந்தரமான தொழிலாளர்களே இல்லை என்பது மட்டுமல்ல, நிரந்தரமே வேண்டாம் எனச் சொல்பவர்களை, பக்கோடா தொழிலாளர்களை, எந்தவித பாதுகாப்புமற்ற டெலிவரி தொழிலாளர்களை, கிடைக்கும் வேலையைச் செய்தாக வேண்டிய தொழிலாளர்களை இந்தியா முழுவதும் உருவாக் குவதே மோடியின் கனவாக இருக்கிறது.

வேலைப் பாதுகாப்பு, ஊதியப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு ஏதுமற்ற தொழிலாளர்கள், இளைஞர்களை உருவாக்குவதுதான் பிஜேபி-ஆர்எஸ்எஸ்ஸின் கனவுத் திட்டமாக இருக்கிறது. ஏனென்றால், அப்படிப்பட்ட வேலையில்லாப் பட்டாளம், அரைகுறை வேலை, அரைகுறை கூலி/ஊதியம் பெறும் பட்டாளம் வளர்கிற போது தான், விரக்தியுற்ற இளைஞர் பட்டாளத்தை, அதன் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம்தான் பாசிச மதவெறி அரசியலுக்கான பட்டாளத்தை உருவாக்கிட முடியும் என பிஜேபி-ஆர்எஸ்எஸ் கருதுகிறது. அதற்கேற் பத்தான், அப்படிப்பட்ட ஒரு நிலைமையை

உருவாக்கிடத்தான், தொழிலாளர் சட்டங்கள், கார்ப்பரேட் முதலாளிக்கான சட்டங்களாக உருமாற்றப் படுகின்றன. அரசுத்துறை, பொதுத் துறை நிறுவனங்கள் அனைத்தும் தனியாருக்கு, அதானிக்கும் அம்பானிக்கும் தாரை வார்க்கப் படுகின்றன. அதற்கு எதிராக எழுந்து வரும் தொழிலாளர் கிளர்ச்சிகளை ஒடுக்கிட கருப்புச் சட்டங்கள் உருவாக்கப்பட்டு அவர்கள் மீது ஏவப்படுகின்றன.

தமிழ்நாடு அரசாவது தமிழ்நாட்டின் உழைக்கும் மக்களுக்கு சாதகமாக ஏதாவது செய்யும் என எதிர்பார்த்தால், அதுவும் நடப்பதாக தெரியவில்லை. உதாரணமாக, தூய்மைப் பணியாளர்களுக்கு என மாநில அரசு அறிவித்த குறைந்தபட்ச ஊதியமும் கிடைக்க வில்லை. கோவை, குமரி மாவட்ட ஆட்சியாளர்கள் அறிவித்த மாவட்ட ஊதியமும் கிடைக்க வில்லை. கோவை தூய்மைப் பணியாளர்கள் மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். வாக்குறுதி வழங்கப்பட்டது. அரசாணைகள் வெளியிடப்பட்டன. ஆனால், இன்றுவரை நாளொன்றுக்கு 715 ரூபாய் சம்பளம் மட்டும் அவர்களுக்கு கானல் நீராகவே இருக்கிறது. இந்த நிலையில் திமுக அரசு, தொழிற் சாலைகள் சட்டத் திருத்த மசோதவை முன்வைத்திருக்கிறது. இது கண்டனத்திற்குரியது. மோடியின் தொழிலாளர் விரோத, கார்ப்பரேட் முதலாளிகள் ஆதரவு பாதையிலேயே திமுக அரசும் பயணிப்பதையே இது காட்டுகிறது. திமுக பிஜெபியை வாயளவில் எதிர்ப்பது, செயலளவில் ஆதரிப்பது என்பது போலவே தெரிகிறது.

உண்மையில் திமுக அரசு, தொழிலாளர் ஆதரவு அரசாக இருக்குமானால், பிஜேபிக்கு எதிரான அரசாக இருக்குமானால், மோடி அரசின் தொழிலாளர் விரோத சட்டங்களுக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றிட வேண்டும். தொழிற்சாலைகள் சட்டத் திருத்த மசோதவை திமுக அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும். மோடி அரசின் தொழிலாளர் விரோதச் சட்டங்களுக்கு எதிராக திமுக அரசு போராடுமானால், தொழிலாளர் வர்க்கம் ஆதரவு அளிக்கத் தயாராக இருக்கிறது. அப்படியல்லாமல், மோடியின் அடிச்சுவட்டையே திமுக அரசும் தொடரும் என்றால் அதற்கு எதிராகப் போராட தொழிலாளர் வர்க்கம் ஆயத்தமாகி வருகிறது.

- தொழிலாளர் வர்க்கத்தின் எதிரி, கார்ப்பரேட் முதலாளிகளின் காவலன் பிஜேபி அரசை, மோடி அரசை, வரவிருக்கும் 2024 தேர்தலில் தோற்கடிப்பதுதான், தூக்கி எறிவதுதான், இந்திய தொழிலாளர் வர்க்கத்தின், தமிழக தொழிலாளர் வர்க்கத்தின் 2023 மே நாள் சூளுரையாகும்!
- நியாயமான கூலி, சிறந்த பணி நிலைமைகள், வேலை, ஊதியம் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகியவற்றுக்காகவும் தனியார் மயமாக்கத்திற்கு எதிராகவும் மக்கள் விரோத கருப்புச் சட்டங்கள், ஒடுக்குமுறை சட்டங்கள் ஆகியவற்றுக்கு எதிராகவும் போராடுவோம் என இந்த மே நாளில் சூளுரைப்போம்!
- இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாக, தமிழகத்தில் முதல் மே நாள் கொடியை ஏற்றிய தோழர் சிங்காரவேலர் வழிநடப்போம்!
- தொழிற்சாலைகள் சட்டத் திருத்த மசோதவை உடனடியாக தமிழ்நாடு அரசு திரும்பப் பெறச் செய்யப் போராடுவோம்!"

*சமீப காலமாக நீதிபதிகள் தங்களுக்கு தனிப்பட்ட முறையில் சரி எனப்படும் கருத்துக்களை சில சமயம் தீர்ப்புகளில் கொட்டி வருகின்றனர். உச்சநீதிமன்ற நீதிபதி எம்.ஆர்.ஷா கருத்துகள் பல சமயங்களில் மனித உரிமைகள் கருத்துக்கு நேர் எதிரான மற்றும் வலதுசாரி கருத்துக்களின் வெளிப்பாடாக உள்ளது. அவரின் பெரும்பாலான தீர்ப்புகள் இதுவரை குற்றம்சாட்டப்பட்ட சிறைவாசிகள் அனுபவித்து வந்த சட்ட பாதுகாப்பை தகர்க்கும் வகையில் எல்லா அதிகாரங்களும் காவல்துறையினர் வசம் தந்து விடவேண்டும் என்ற தொனியில் உள்ளது. போலிஸ் காவல் 15 நாட்களுக்கு மேல் வழங்கக்கூடாது என்ற குற்றவியல் நடைமுறைச் சட்டம் பரிசீலித்து கூடுதல் நாட்கள் போலிஸ் காவல் தருவதை பரிசீலிக்க வேண்டும் என ஒரு தீர்ப்பில் கூறினார். தற்போது மரணதண்டனை கைதிகள் கருணை மனுவை உடனே அரசு பரிசீலிக்க வேண்டும். அந்த கைதிகள் தூக்கு தண்டனையிலிருந்து அதனால் தப்பித்து வருகின்றனர் என்கிறார்.* ( The State of Maharashtra & Ors. v. Renuka Shinde & Ors. ) *நீதிபதிகள் தீர்ப்புகள் சட்டம் போன்றது. உச்சநீதிமன்றத்திற்கு மேல் ஒரு நீதிமன்றம் இல்லாத நிலையில் இது போன்ற கருத்துகள் சமூகம் பயணிக்கும் பாதை குறித்து அச்சப்படவைக்கின்றன.*

**எழுத்தாளர் வழக்கறிஞர் பாலமுருகன் முகநூல் பதிவிலிருந்து...**

# ஊர் தோறும் ஊராட்சி தோறும் மக்களிடம் செல்வோம்

**பாலசுந்தரம்**

*மார்ச் 20 ல் தொடங்கிய சட்டப்பேரவை தொடர்ந்து நடந்து வருகிறது. பல துறைகளின் மானிய கோரிக்கைகள் மீதான விவாதங்களும் நடந்து வருகின்றன. ஒரு பருந்துப் பார்வையில் பார்த்து கூறுவதானால், நிதி அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன் நிதிநிலை அறிக்கை ஆட்சியாளர்களின் பொருளாதார சீர்திருத்தக் கொள்கையைத்தான் பின்பற்றுகிறது. விவசாய அமைச்சரின் வேளாண் நிதிநிலை அறிக்கையும் நிதியமைச்சர் காட்டிய பாதையிலேயே உள்ளது.*

*அரசுப் பள்ளி குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் விரிவாக்கம், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மகளிர் உரிமைத் தொகை மாதம் ஆயிரம், அம்பேத்கர் படைப்புகள் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியிட நிதி போன்ற வரவேற்கத் தக்க அறிவிப்புகள் உள்ளன. மகளிர் உரிமைத் தொகை, வாக்குறுதியை நிறைவேற்றுவதென்பதைவிட பல முனையிலிருந்து எழுந்த கேள்விகளும் பெண்களிடம் பெரும் எதிர்பார்ப்பு காரணமாக உருவாகி வந்த அதிருப்தியும் பட்ஜெட்டில் அறிவிக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.*

**இந்தியாவுக்கு வழிகாட்டியாக தமிழ்நாட்டில் தோழர் சிங்காரவேலர் மே நாளை கொண்டாடியதன் 100வது ஆண்டு இது. இந்த ஆண்டில், முன்வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் 'தொழிலாளர்' என்ற சொல் கூட இடம்பெறாதது அதிர்ச்சி அளிக்கிறது.**

*பொது நிதிநிலை அறிக்கையையும் வேளாண் நிதிநிலை அறிக்கையையும் ஒரு சேர பார்த்தால், விவசாயம், விவசாய தொழிலாளர் உள்ளிட்ட விவசாய சமூகம், கிராமப்புற ஏழைகளது வீட்டுமனை, வீடு பிரச்சனை, தொழிலாளர் நலன், இளைஞர் வேலை வாய்ப்பு, மருத்துவம் போன்றவை முற்றிலும் புறக்கணிக்கப் பட்டுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. இந்தியாவுக்கு வழிகாட்டியாக தமிழ்நாட்டில் தோழர் சிங்காரவேலர் மே நாளை கொண்டாடியதன் 100வது ஆண்டு இது. இந்த ஆண்டில், முன்வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் 'தொழிலாளர்' என்ற சொல் கூட இடம்பெறாதது அதிர்ச்சி அளிக்கிறது. இதுபற்றி இதுவரை எவரும் கேள்வி எழுப்பாதது பேரதிர்ச்சி அளிக்கிறது.*

*கோவில், மடம், அறக்கட்டளை நிலங்களில் குடியிருக்கும் ஏழைகளுக்கு அவர்கள் குடியிருக்கும் நிலத்தை சொந்தமாக்க வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கை. இகக(மாலெ) உள்ளிட்ட இடதுசாரிகள் இதற்காக தொடர்ந்து குரலெழுப்பி வருகின்றனர். இந்த கோரிக்கை பற்றி திமுக உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்புகிறார். இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்(செயல்) பாபு, 40 ஆண்டுகளுக்கு மேலான அந்த கோரிக்கையை 'ஏற்கமுடியாது' என்று ஓங்கி மறுத்துவிட்டார். அறநிலையத் துறை அமைச்சர், கோவில்களை காப்பாற்றவில்லை; மாறாக கோவில், மடத்து நிலப்பிரபுத்துவத்தை "வீழாத கதையாக்க" முக்காலமும் பணியாற்றுகிறார்.*

ஆண்டு துவக்கத்தில், சட்டப்பேரவையில் அடாவடியாகப்பேசிய ஆளுநர் ரவி முதல்வரின் இடித்துரையை பொறுக்க முடியாமல் அவராகவே வெளிநடப்பு செய்து கொண்டார். இப்போது சட்டப் பேரவைக்கு வெளியே இருந்து கொண்டு, ஆளுநர் மாளிகையை அரசியல் மாளிகையாக்கிக் கொண்டிருக்கிறார். அது கண்டு முதலமைச்சர் ஸ்டாலின் கலைஞரை விடவும் ஆவேசமாக சீறி எழுந்தார். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதைக் காட்டிக் கொண்டார். ஆளுநர் தன்னை ஒரு சர்வாதிகாரியாக எண்ணிக் கொள்ளக் கூடாது என்று கூறி சரியாகவே சூடு வைத்தார். பிரதமர் பக்கத்தில் ஆளுநர் இருக்கவே இன்முகம் காட்டி நடந்து கொண்ட முதலமைச்சர், அடுத்த நாளே ஆளுநருக்கு எதிராக தீர்மானத்தை நிறைவேற்றி, ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டத்துக்கு ஒப்புதல் பெற்றுக் கொண்டார்.

அந்த அளவு 'ஆளுமை' காட்டிய முதலமைச்சர் மேலே குறிப்பிட்ட மக்கள் பிரச்சனைகளை புறக்கணிப்பது பேரதிர்ச்சி அளிக்கிறது.

பட்ஜெட் கூட்டத்தொடர் நடக்கும் போது, மானியக் கோரிக்கை விவாதங்கள் நடக்கும் சமயத்தில் தொழிற்சங்கங்கள், விவசாய சங்கங்கள், இடதுசாரி கட்சிகள், அரசின் கவனத்தை ஈர்க்க கோரிக்கைகளை வலியுறுத்தி இயக்கங்கள் நடத்துவது வழக்கம். துறைசார்ந்த அமைச்சர்கள், பல்வேறு பிரதிநிதிகளையும் சந்தித்து பேசுவார்கள். கோரிக்கைகள் சிலவற்றை ஏற்று சட்டப்பேரவை அறிவிப்பதும் வழக்கம். ஆனால், போராட்டம் நடத்திய ஜாக்டோ ஜியோ அமைப்புடன் இரண்டு அமைச்சர்கள் பேச்சு நடத்தி போராட்டத்தை கைவிடச் செய்தனர். கோரிக்கைகள் பற்றி இதுவரை அரசிடமிருந்து எந்த பதிலும் இல்லை. மிகக் குறைந்த சம்பளத்தில் எவ்வித பணிப்பாதுகாப்பும் இன்றி இரவு பகலாக உழைத்து அரசு கஜானாவை நிரப்பும் டாஸ்மாக் ஊழியர்கள் தங்கள் அடிப்படை கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்ட அறிவிப்புச் செய்திருந்தனர். தொழிற்சங்க பிரதிநிதிகளிடம், அவரைச் சென்று பார்க்காமலேயே போராட்டத்தை அறிவித்து விட்டதாக செல்லமாக கோபித்துக் கொண்டார் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி. ஆனாலும் நீண்டநேர பேச்சு வார்த்தைக்குப் பிறகும் முக்கிய கோரிக்கைகள் எதுவும் ஏற்கப்படவில்லை. சங்கங்கள் போராட்ட அறிவிப்பை திரும்பப் பெற்றுக் கொண்டன. மது விற்பனையில் எந்த இழப்பும் வந்துவிடக் கூடாது என்பது ஒருபுறம் இருந்தாலும் போராட்டங்கள் தேவை இல்லை என்பதே அரசின் அணுகுமுறையாக இருக்கிறது. எனவே போராட்டங்கள் தேவை என்பதே மக்கள் இயக்கங்களின் அணுகுமுறையாக இருக்க முடியும்.

மோடி ஆட்சியின் தவறான கொள்கைகளால் விளைந்த விவசாய நெருக்கடி, செல்லாத பணம் ஏற்படுத்திய கொடும் துன்பம், கொரோனா பெருந்துயர், பெட்ரோல், டீசல், எரிவாயு விலை உயர்வால் ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்த விலை உயர்வு, அதல பாதாளத்தில் வீழ்ந்து விட்ட வேலை வாய்ப்பு உள்ளிட்ட நெருக்கடிகளால் ஊரக மக்களின் வாழ்வு சொல்லொணா துயரத்துக்கு ஆளாகி உள்ளது. இந்த நிலையில் வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சியதைப் போல தேசிய ஊரக வேலைத்திட்டத்தை மோடி ஆட்சி கொன்று வருகிறது. பல்லாயிரம் கோடிகள் நிதி ஒதுக்கீடு வெட்டு, பல மாதங்கள் ஊதியம் பாக்கி என ஊரக மக்களின் உயிர்பிழைக்கும் வாழ்வாதாரத்தோடு ஒன்றிய பாஜக அரசு விளையாடுகிறது. டிஜிட்டல் வருகைப் பதிவேடு என்ற சுருக்கு கயிறு கொண்டு வேலைக்கு வருபவர்களை தடுத்து விடுகிறது. கள்ளக்குரிச்சி மாவட்டத்தில் வேலை செய்பவர் விவரங்களைப் பார்த்தால் பேரதிர்ச்சி ஏற்படுகிறது. ஒரு வேலையில் அதிகபட்சம் 10 பேர் மட்டுமே வேலை செய்கிறார்கள். மற்றொரு இடத்தில் (பெரும்பட்டு ஊராட்சி) இருவர் மட்டுமே வேலை செய்வதாக வருகைப்பதிவேடு கூறுகிறது. நவீன வருகைப்பதிவேடு போன்றவை இருந்தாலும் ஊழல், முறைகேடுகள் ஒழிந்த பாடில்லை. உச்ச கட்ட துயரமாக, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த அய்ந்து குழந்தைகளின் தாய் ஓடும் பேருந்திலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். அவருக்கு வேலை வழங்கவில்லை என்பதுதான் காரணம். அதிகாரிகள் ஊராட்சி செயலரை பணிநீக்கம் செய்துள்ளனர். இந்த மரணத்துக்கு ஊராட்சி செயலர் மட்டுமா பொறுப்பு? மாவட்ட அதிகாரிகள் தொடங்கி, மோடி ஆட்சிவரை பொறுப்பு. இது பற்றி திமுக அரசு அமைதி காப்பது அதிர்ச்சி அளிக்கிறது. தேசிய ஊரக வேலைத்திட்டம் பற்றி, நிதிநிலை அறிக்கை (பத்தி75) சில வரிகளில் கடந்து சென்று விடுகிறது. நடப்பு ஆண்டில் ரூ.10,914

கோடியில், 30.87 கோடி வேலை நாட்கள் உருவாக்கப் பட்டு இருப்பதாகவும் 2023-24ல் ரூ. 22,562 கோடியில் 35 கோடி வேலை நாட்கள் உருவாக்கப்படும் என்பதோடு முடிந்து விடுகிறது. கடந்த ஆண்டை விட ரூ.11,648 கோடி அதிகம் ஒதுக்கீடு செய்து, வெறும் 4 கோடி வேலை நாட்கள்தான் உருவாக்க முடியும் என்றால் இது என்ன கணக்கு? இதற்கு எந்த விளக்கமும் அறிக்கையில் இல்லை. தேர்தல் வாக்குறுதியாக 50 நாள் கூடுதலாக வேலை அளிக்கப்படும் என்று திமுக சொன்னது. ஆனால் இரண்டாண்டுகளாகி விட்டன. இதுபற்றி எந்த விளக்கமும் இல்லை. பாக்கி ஊதியம் பல நூறு கோடி ரூபாய் பாக்கி இருப்பதை சுட்டிக்காட்டி பிரதமருக்கு கடிதம் எழுதிய முதல்வர் இந்த திட்டம் அணு அணுவாக மோடி ஆட்சியில் கொல்லப்படுவது பற்றி பிரதமரிடம் பேசியிருக்க வேண்டும். அது ஒரு கோடிக்கும் மேற்பட்ட ஊரக மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை என்பது தெரியாதா?

இந்த ஊரகப் பகுதி மக்களின் துயரத்தை மோடி ஆட்சிக்கு எடுத்துக் காட்டும் வகையில் அனைத்திந்திய விவசாய கிராமப்புர தொழிலாளர் சங்கம் ஏப்ரல் 27 அன்று ஒன்றிய அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்த முடிவு செய்துள்ளது. அகில இந்திய அளவில் நடைபெற உள்ள கிளர்ச்சியின் வாயிலாக இந்திய குடியரசுத் தலைவரின் கவனத்தை ஈர்க்கும் விதம் கோரிக்கை மனுக்கள் அனுப்புவதென்றும் முடிவு செய்துள்ளது.

கிராமப்புர தொழிலாளர் வீட்டுமனை, வீடு தொடர்பாக மத்திய சட்டம் இயற்ற வேண்டும், நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டத்தை உருவாக்கிட வேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகள் மீது இயக்கம் நடத்த உள்ளது. இதன் தொடர்ச்சியாக மே மாதத்தில் ஒரு பரப்புரை பயணத்தை நடத்தவும் முடிவு செய்துள்ளது. இந்த பயணம், தேவகோட்டை தொடங்கி தமிழ்நாட்டின் பல மாவட்டங்களின் வழியாக சென்னையில் முடிகிற வகையில் திட்டமிடப்படுகிறது.

"மோடி ஆட்சியை வெளியேற்றுவோம்; தேசிய ஊரக வேலைத்திட்டத்தை பாதுகாப்போம்" எனும் இந்த பரப்புரை பயணம் ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை மட்டுமல்ல தேசத்தை காக்கும் போராட்டமாகவும் இருக்கும்.

ஆளுநரை மண்டியிடச் செய்தது மக்களது எதிர்ப்புக் குரல்தான். ஆளுநருக்கெதிரான சட்டப் பேரவை தீர்மானம் மக்களது குரலால் சக்தி பெற்றது. அதைப்போல ஊரக வறிய மக்களது, கிராமப்புர தொழிலாளரது வலுவான தொடர் இயக்கம் மோடி ஆட்சிக்கு முடிவு கட்டும். இது, மாநில அரசு தொழிலாளர் பக்கம் நிற்க வேண்டும் என்று அழுத்தம் தரும் இயக்கமாகவும் இருக்கும். கிராமப்புர தொழிலாளரைத் தொடர்ந்து தொழிலாளர் வர்க்கம் இந்த மே நாளின் 100வது ஆண்டில் குமரி தொடங்கி சென்னை வரை ஒரு பரப்புரை பயணத்தை நடத்த உள்ளது. விரிந்து பரந்த ஆழமான வெகுமக்கள் அரசியல் இயக்கம் தான் இப்போதைய தேவை. ஊராட்சி தொடங்கி, ஒன்றியம் மாவட்டங்கள் வழியாக சுதந்திரமாக இயங்கும் துடிப்புமிக்க பெரும் திரள் வெகுமக்கள் இயக்கத்தின் மூலமே அரசியல் செல்வாக்கு செலுத்தமுடியும். வெகுமக்கள் பக்கம் திமுக ஆட்சி நின்றால் மோடி எதிர்ப்பு பொருத்தமுள்ளதாக இருக்கும். மட்டுமின்றி, மாநிலங்களுக்கு அதிகாரம், உண்மையான கூட்டாட்சி, மதச்சார்பின்மை இவற்றை வென்றெடுக்க ஒரே ஆயுதமும் மக்கள் இயக்கம்தான். ஊர் தோறும் ஊராட்சி தோறும் மக்களைத் திரட்ட மக்களிடம் செல்வோம். கிராமப்புர தொழிலாளர் இயக்கத்தை ஆற்றல்மிக்க மக்கள் இயக்கமாக்குவோம்!

## ஏப்ரல் 14 உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சிகள்






# தமிழ்நாடு அரசின் வேளாண் நிதிநிலை அறிக்கை: **வெற்று ஆரவார அறிவிப்புகள்**

அ.சந்திரமோகன்

*தமிழ்நாடு அரசாங்கம் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் பெருத்த ஏமாற்றமே மிஞ்சியிருந்தது. அதற்கடுத்து தாக்கல் செய்யப்பட்ட வேளாண் நிதிநிலை அறிக்கையும் வெற்று ஆரவாரம்தான் என அம்பலமாகியுள்ளது. முழுமையாக வேளாண் நிதிநிலை அறிக்கையைப் பரிசீலனை செய்தால் ஏமாற்றம் தரும் நிதிநிலை அறிக்கையாகவே இருக்கிறது.*

*விவசாயத்திற்கு ஆதாரமான நீர்நிலைகளை மீட்டெடுக்க, பல்வேறு வேளாண் உள்கட்டமைப்பு வசதிகளை கட்டமைக்க, விவசாயிகளின் வாழ்வா சாவா எனப்படும் இயற்கை பேரிடர்கள், பயிர்க் காப்பீடுகள், விவசாய கடன்கள் மற்றும் தள்ளுபடிகள் வரை ஒதுக்கப்பட்ட நிதி மிகமிகக் குறைவானதே !*

*சங்க இலக்கியங்கள் துவங்கி, நவீன வேளாண் நிபுணர்கள் வரை மேற்கோள் காட்டி விவசாயத்தின் முக்கியத்துவத்தை பட்ஜெட் அறிக்கை பாராட்டுகிறது; ஆனால், வேளாண் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தபோது, அமைச்சர் " இந்த வேளாண் பட்ஜெட்டில் விவசாயிகளின் கருத்துகள் இணைக்கப்பட்டுள்ளன." எனக் கூறியதில் சிறிதளவும் உண்மையில்லை. விவசாயிகளின் கோரிக்கைகளை, கருத்து கேட்புக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளை நிறைவேற்றும் வகையில் இந்த அறிக்கை இல்லை.*

**உரிய இழப்பீடுகளை வழங்காமல், தனியார் கார்ப்பரேட் காப்பீட்டுக் கம்பெனிகள் காப்பீட்டுத் தொகையை கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால், கடனாளியாகும் ஏழை, நடுத்தர விவசாயிகளைப் பாதுகாக்க நிதிநிலை அறிக்கை தகுந்த மாற்று காப்பீட்டு வழி முறை களை முன்வைக்கவில்லை.**

### விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் விலை தரப்பட்டதா?

*"தமிழ்நாடு அரசின் கடந்த இரண்டு வேளாண் பட்ஜெட்டுகள் விவசாயிகளுக்கு உரிய வருவாய் கிடைப்பதையும் அவர்களின் உழைப்புக்கு ஏற்ற வருமானத்தை ஈட்டுவதையும் உறுதிப்படுத்துவது மற்றும் விவசாயத்தில் அறிவியல் முறைகளைப் பயன்படுத்துவதையும் விவசாயத்தில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து அதிக உற்பத்தி இலக்கை எட்டுவதையும் நோக்கமாகக் கொண்டது."*

*"விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உறுதியான லாப விலை கிட்டினால்தான் விவசாயிகள் ஊக்கம் பெறுவார்கள்; இதன் பின்னணியில், தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் விவசாயிகளிடமிருந்து, குறைந்தபட்ச ஆதரவு விலையை விட அதிக விலையில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது."*

*என வேளாண் அமைச்சர் சட்டமன்ற உரையில் ஆரவாரமாகத் தெரிவித்தார். அமைச்சர் சொல்வது உண்மையா? நெல்லுக்கு கடந்த ஆண்டு வழங்கப்பட்ட குவிண்டால் ஒன்றுக்கு சன்னரகத்திற்கு ரூ.100 மற்றும் சாதாரண ரகத்திற்கு ரூ.75 என்பவை தான் தற்போதைய வேளாண் நிதிநிலை அறிக்கை அறிவிப்புகளாக உள்ளது. கரும்புக்கு டன் ஒன்றுக்கு கடந்த ஆண்டு வழங்கப்பட்ட சிறப்பு ஊக்கத் தொகை ரூ.195யை மட்டுமே இந்த ஆண்டும் அறிவித்துள்ளார்கள்.*

சட்டமன்ற தேர்தலில் திமுக கொடுத்த வாக்குறுதி, 'நெல்லுக்கு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2500, கரும்புக்கு விலை டன் ஒன்றுக்கு ரூ.4000' என்பதாகும். இந்த வாக்குறுதிகள் குறித்து நிதிநிலை அறிக்கையில் எதுவுமில்லை. இடுபொருட்கள் விலை உயர்ந்து, முதலீட்டுச் செலவுகள் உயர்ந்து வருவதைப் பற்றிய அக்கறை சிறிதளவு கூட வேளாண் அறிக்கையில் காணப்படவில்லை. மேலும், வேளாண் விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை குறித்து இந்த அறிக்கை கவனம் செலுத்தவில்லை; குறைந்தபட்ச ஆதார விலையைத் தீர்மானித்து, தமிழ்நாடு அரசே கொள்முதல் செய்து மக்களுக்கு விநியோகம் செய்யும் திட்டங்கள் எதுவும் அறிக்கையில் இல்லை.

## வேளாண் உற்பத்தியை அதிகரிக்க தேவை நிலச்சீர்திருத்தம் அல்லவா ?

சட்டமன்றத்தில் வேளாண் அமைச்சர், “தமிழக விவசாயத்தின் தற்போதைய நிலைமை யானது, விவசாய நிலங்கள் வாழ்விடங்களாக மாற்றப்படுகின்றன. விவசாய நிலங்களின் பரப்பளவு வேகமாக குறைந்து வருகிறது. எனவே, உற்பத்தியை அதிகரிப்பது காலத்தின் தேவை... புன்செய் / வறண்ட நிலத்தில் நன்கு வளரும் பயிர் வகைகளை உருவாக்குவது அவசியமாகிறது. இதன் வழியாக அத்தகைய நிலத்தின் உற்பத்தி திறனும் அதிகரிக்கிறது... பல்வேறு துறைகளின் முயற்சிகள் மூலம் மட்டுமே விவசாயத்தை விரிவாக்க முடியும்... அடுத்த ஆண்டில், 127 லட்சம் மெட்ரிக் டன் இலக்கு, மொத்த உணவு தானிய உற்பத்திக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.” “கடந்த மே 2021ல் திமுக அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதி லிருந்து அமலாக்கப்பட்ட பல்வேறு நீண்டகால திட்டங்கள் வாயிலாக, 1,93,000 ஹெக்டேர் நிலப்பரப்பு கூடுதலாக சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டது.” என்றார். மேலும் அவர்,

“தமிழ்நாட்டின் சாகுபடி நிலப்பரப்பை அதிகப்படுத்த வேண்டும்” என்ற வேளாண் கொள்கையை கொண்டுள்ளதாகவும் தமிழ்நாடு அரசின் தொலைநோக்கு திட்டத்தில், “நிகர சாகுபடி பரப்பினை உயர்த்துவது” பற்றி தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது என்றும் கூறினார். ஆனால், வேளாண் நிதிநிலை அறிக்கை “வறண்ட நிலங்களில் விவசாயத்தில் அறிவியல் முறைகளைப் பயன்படுத்துவது, விவசாயத்தில் தொழில்நுட்பத்தை ஒருங் கிணைத்து அதிக உற்பத்தி இலக்கை எட்டுவது” ஆகியவற்றை மட்டுமே வழிகாட்டுதல்களாக முன்வைக்கிறது. நிலமுள்ள விவசாயி தனது சாகுபடி நிலத்தை தக்க வைத்துக் கொள்ளாமல், விவசாயி உற்பத்தி செய்யும் விளைபொருள் களுக்கு இலாபகரமான விலை கிடைக்காமல், உற்பத்தி எப்படி அதிகரிக்கும், வேளாண்மை எப்படி செழிக்கும்?

சாகுபடி நிலப்பரப்பை அதிகரிக்க, அவசியமானது, தீவிர நிலச்சீர்திருத்தம். “வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலம் தேவை என்ற பெயரால்”, விவசாய நிலங்களை விவசாயம் அல்லாத கார்ப்பரேட் முதலாளித்துவ ஆதரவு திட்டங்களுக்காக, சிறு குறு விவசாயிகளை நிலங்களை விட்டு வெளியேற்றி சாகுபடி நிலப்பரப்பைக் குறைக்க கூடாது. மாறாக, சாகு படி நிலப்பரப்பை அதிகரிக்க தீவிர நிலச்சீர்திருத் தங்கள், ஆக்கபூர்வ நிர்வாக நடவடிக்கைகளை அமலாக்க வேண்டும்.

அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு வகையான அரசு புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்து வரும், குடியிருந்து வரும் விவசாயிகளுக்கு பட்டா உரிமைகள் வழங்கிட வேண்டும்; மேலும், வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உள்கட்டமைப்பு வசதிகளையும் அவர்களுக்கு உருவாக்கித் தரவேண்டும்.

ஆ) வனப்பகுதிகளை ஒட்டி, சாகுபடிக்குக் கொண்டு வரப்படாமல், புல் புதர்களாக இருந்த தரிசு நிலங்களை நெல், வாழை, தென்னை, மா, காய்கறிகள், மலர்கள் என பொன் விளையும் பூமிகளாக மாற்றிய பழங்குடியினர், பட்டியல் சாதி, மிகவும் பிற்பட்ட ஏழை விவசாயிகளை பாரம்பரிய நிலங்களிலிருந்து பலவந்தமாக கடந்த கால அரசாங்கங்கள் வெளியேற்றின. இதனால், பொன் விளைந்த விவசாய நிலங்கள் மீண்டும் புல்புதர்களாக, காடுகளாக மாறிவிட்டன. இவை அவரவர்களுக்கே திரும்பி வழங்கப்பட்டால், சாகுபடி பரப்பு அதிகரிக்கும்; வேளாண் பொருட்கள் உற்பத்தி உயரும்.

இ) கோவில்கள், மடங்கள் மற்றும் மிகப்பெரிய நிறுவனங்களுக்கு சொந்தமான இலட்சக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களில் குத்தகை விவசாயம் செய்துவரும் ஏழை, சிறு, குறு விவசாயிகளுக்கு அவரவர் நிலங்களை சொந்தமாக்க வேண்டும். இதனால், கிணறுக ளுக்கான மின்சார இணைப்புகள், கடன் உதவிகள் மற்றும் பல்வேறு உள்கட்டுமான வசதிகளையும் பெற்று குத்தகை விவசாயிகள் மிகுந்த உற்சாகத்

துடன் முப்போகமும் சாகுபடியில் ஈடுபட்டு வேளாண் உற்பத்தியை அதிகப்படுத்துவார்கள்.

**நிவாரணங்களா, கண்துடைப்புகளா ?**

நிதிநிலை அறிக்கையில்,"இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் வருமான இழப்பி லிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாது காக்க, பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா திட்டத்தின் கீழ், 2021–22ஆம் ஆண்டில், 26 லட்சம் விவசாயிகள் 40.74 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பை பதிவு செய்துள்ளனர். காப்பீட்டுப் பிரீமியம் மானியமாக ரூ.1,695 கோடி வழங்கிய தமிழக அரசு, இதுவரை 6.71 லட்சம் விவசாயி களுக்கு இழப்பீடாக ரூ.783 கோடி வழங்கி யுள்ளது." "வடகிழக்கு பருவமழை மற்றும் 2023 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு 1.82 லட்சம் விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உள்கட்டமைப்பு மானியமாக ரூ.163.6 கோடிக்கான நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது" என கூறப்பட்டுள்ளது.

இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு பயிர்க்காப்பீட்டுத் திட்டம் என்பது இருந்தாலும், உண்மையான இழப் பீட்டை விவசாயிகளால் பெற முடிவதில்லை; உரிய இழப்பீடுகளை வழங்காமல், தனியார் கார்ப்பரேட் காப்பீட்டுக் கம்பெனிகள் காப்பீட்டுத் தொகையை கொள்ளையடித்துக் கொண்டிருக்கி றார்கள். இதனால், கடனாளியாகும் ஏழை, நடுத்தர விவசாயிகளைப் பாதுகாக்க நிதிநிலை அறிக்கை தகுந்த மாற்று காப்பீட்டு வழி முறை களை முன்வைக்கவில்லை. அறிக்கையில் பயிர் காப்பீட்டுக்காக ஒதுக்கியுள்ள ரூ.2337 கோடியில், விவசாயிகளுக்கு எவ்வளவு போய் சேரும்?

**பயிர் கடன்களும், கடன் தள்ளுபடிகளும்**

சிறு குறு, நடுத்தர விவசாயிகள் உயிர்களைப் பறித்துக் கொண்டு இருக்கும் 'கடன்களிலிருந்து விடுதலை' செய்வதற்கு கடன் தள்ளுபடிகள் பற்றிய அறிவிப்பு எதுவும் அறிக்கையில் இல்லை. வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கு ரூ.14,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும் கிராமப்புற புதிய பணக்காரர்கள், அரசியல் வாதிகள், ஊழல் அதிகாரிகள் கட்டுப்பாட்டில் உள்ள வேளாண் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக வழங்கப்படும் பெருமளவு பயிர்க்கடன்கள், பணக்கார விவசாயிகளுக்கும் நிலப்பிரபுக்க ளுக்கும்தான் செல்கிறது. சிறு,குறு விவசாயிக ளுக்கு பயிர்கடன்கள் சென்று சேருவதற்கான உத்தரவாதம் எதுவும் அறிக்கையில் இல்லை.

**வேளாண் நிதிநிலை அறிக்கையை வெற்று ஆரவார அறிவிப்புகள் என்று சொல்வது ஏன்?**

அறிக்கையில், தேவையான நிதி ஒதுக்கீடு கள் காணப்படவில்லை. "கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி"திட்டத்தில், 2504 ஊராட்சி களுக்கு ரூ.230 கோடி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. அதாவது, ஒரு ஊராட்சிக்கு ரூ.9 இலட்சம் வழங்கப்படும். இந்த தொகையில் தான், பழங்கள், தென்னங் கன்றுகள் வழங்குதல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், சொட்டுநீர் பாசனம், சோலார் சக்தி வழங்குதல் மற்றும் எஸ்சி,எஸ்டி விவசாயிகளுக்கு ஆள்துளை கிணறுகள் அமைக்க நிதி வழங்குதல் வரை செய்ய வேண்டும்!

◆"தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்" திட்டத்தில், 25 மாவட்டங்களில் உற்பத்தியை உயர்த்த நிதி ஒதுக்கிடு ரூ.82 கோடி. அதாவது, ஒரு மாவட்டத்திற்கு ரூ.3.5 கோடி.

◆"அங்கக வேளாண் கொள்கை" Organic farming பற்றிய ஆராவார அறிவிப்பு, தனியாக ஒரு அறிக்கை எல்லாம் வெளியிடப்பட்டுள்ளது. நமது பாரம்பரிய இயற்கை விவசாயத்திலிருந்து விலகி வந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. வீரிய ரக விதைகள் சார்ந்த விவசாயம் தான் நடைமுறையில் உள்ளது. அவற்றை மாற்றி அமைக்க அரசிடம் உள்ள கொள்கை என்ன வென்றே தெரியவில்லை. இது ஏராளமான நிதி கோரும் மாபெரும் பரிசோதனை முயற்சியாகும். ஆனால், அங்ககத் தொகுப்புகளுக்கு ரூ.26 கோடி நிதி மற்றும் நீலகிரி மாவட்டத்திற்கு 5 ஆண்டுக ளுக்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு மட்டுமே அறிவிப்பில் உள்ளது.

◆வேளாண்மையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை புகுத்துவது என்பதற்காக, எந்திரமயமாக்கத்திற்கு வெறும் ரூ.125 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 60,000 சிறு குறு விவசாயிகள் மற்றும் 30,000 விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ.2500 மதிப்புள்ள வேளாண் கருவிகளை வழங்குவார்கள்! தோட்டக்கலை பட்டதாரிகளை தொழில் முனைவோராக்க ரூ.2 இலட்சம் வழங்கப்படும்! என்று சொல்லும் அறிக்கையில் எவ்வளவு பேருக்கு, எவ்வளவு மொத்த நிதி ஒதுக்கீடு என்பது இல்லை.

◆மாடு, ஆடு வளர்ப்புக்கு ரூ.50 கோடியும் இலட்சக்கணக்கான பனை விவசாயிகள் மேம்பாட்டுக்கு ரூ. 2 கோடி மட்டுமே ஒதுக்கீடு!

◆காவிரி டெல்டாவில் தூர்வாரும் பணிக்கு

வெறும் 90 கோடி ரூபாயும் காவிரியின் கடை மடைக்கு பாசன நீர் அனுப்ப வாய்க்கால் தூர் வார வெறும் ரூ.5 கோடி மட்டுமே.

◆புதிய பாசன திட்டங்கள் குறித்த எந்த அறிவிப்பும் இல்லை. காவிரி வைகை குண்டாறு இணைப்பு திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு நிதி ஒதுக்கீடு இல்லை.

...இப்படியாக, பட்டியல் நீள்கிறது.

**தேவை, ஒரு பொது விவாதம்!**

இத்தகைய வேளாண் நிதிநிலை அறிக்கைகளை வெளியிடுவதால் மட்டுமே தமிழ் நாட்டு விவசாயத்தில் மாற்றங்கள் வராது. தமிழ் நாட்டு விவசாயம் தீவிர மாற்றங்களைக் கோருகிறது. நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரில், வேளாண் நிதிநிலை அறிக்கை பற்றிய ஆக்கபூர்வமான விவாதங்களில் ஈடுபட வேண்டும். இது ஒருபுறமிருக்க, விவசாய சங்கங்கள் மற்றும் முற்போக்கு வேளாண் பொருளாதார அறிஞர்கள், தமிழ் நாட்டு வேளாண்மையை மேம்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய தீவிர நடவடிக்கைகள் பற்றிய பொது விவாதத்தை கட்டமைக்க வேண்டும். பாமகவின் நிழல் பட்ஜெட் போல் அல்லாமல் களத்திலுள்ள இடது செயல்வீரர்கள் சேர்ந்து ஒரு இடதுசாரி செயல் திட்டம் உருவாக்க வேண்டும்.

# இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தெளிவற்ற, நடைமுறைச் சாத்தியமற்ற தொலைதூர வாக்களிப்புத் திட்டம்

உள்நாட்டில் புலம்பெயர்ந்தோருக்கான தொலை தூர வாக்களிப்பை அறிமுகப்படுத்தும் இந்திய தேர்தல் ஆணையத்தின் முன்மொழிவுக்கு, பிப்ரவரி 27, 2023 தேதியிட்ட கடிதத்தின் மூலம் இகக(மாலெ) எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்த முன்மொழிவு நடைமுறை சாத்தியமற்றது, முற்றிலும் தெளிவற்றது என்று கூறியுள்ள இகக(மாலெ), வாக்களிக்கும் குறிக்கோள் மற்றும் நோக்கத்திற்காக உள்நாட்டில் புலம்பெயர்ந்தோர் பற்றிய எந்தவொரு உறுதியான வரையறையையும் வழங்காமல், இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு முன்மாதிரி மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தை உருவாக்குவதை நோக்கி அவசரமாக செயல்படுவது குறித்து தீவிர கவலைகளை எழுப்பியுள்ளது.

இந்தியத் தேர்தல் ஆணையம் சுற்றுக்கு விட்டுள்ள குறிப்பில், உள்நாட்டில் புலம்பெயர்ந்தோர் என்பவர் அவரது முந்தைய வசிப்பிடத்திலிருந்து வெளியேறி வேறிடத்தில் இப்போது குடியேறியுள்ளவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் திருமணம், குடும்பம், வேலை, கல்வி போன்ற காரணங்களுக்காக இடம் பெயர்ந்த பரந்த வகை மக்களை உள்ளடக்கியும் உள்ளது. அதே நேரத்தில், புலம்பெயர்ந்த தொழிலாளர்களை வகைப்படுத்தி முறையான தரவு எதுவும் இல்லை என்பதை இந்தியத் தேர்தல் ஆணையமே ஒப்புக்கொள்கிறது. அதுபற்றிய நம்பத் தகுந்த சரியான பதிவேடோ அல்லது தரவுவோ எதுவும் இல்லை.

இந்தியத் தேர்தல் ஆணையக் கடிதத்தின்படி, 2019 பொதுத் தேர்தலில் 67.4% என்ற குறைந்த வாக்குப்பதிவே இந்த முன்மொழிவுக்கான உந்துதலாகும். ... ஒரு வாக்காளர் தன்னுடைய வாக்குரிமையைப் பயன்படுத்தாமல் இருப்பதற்குப் பலதரப்பட்ட காரணங்கள் உள்ளன. நகர்ப்புரத்தினரின் அக்கறையின்மை, இளைஞர்களின் அக்கறையின்மை போன்ற பல காரணங்களோடு, உட்புற புலம்பெயர்வால் (உள்நாட்டில் புலம் பெயர்ந்தவர்கள்) வாக்களிக்க இயலாமையும் குறைந்த வாக்குப்பதிவுக்கு பங்களிக்கும் ஒரு முக்கிய காரணமாகும்" என பாரா 4இல் கூறப்பட்டுள்ளது. இதனை உறுதி செய்யும் எந்தவொரு ஆழமான ஆய்வுகளோ, பகுப்பாய்வோ இன்றி, இத்தகைய மேலோட்டமான அறிக்கைகள் வெளியிடப்படுவது நம்மைத் திகைப்பில் ஆழ்த்துகிறது. உள்நாட்டு தொழிலா ளர்கள் சம்பந்தமாக எந்த ஒரு தீர்க்கமான ஆலோசனை மேற்கொள்ளாமலும், கணக்கிட்டு வகைப்படுத்தாமலும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியின் ஒட்டுமொத்த செயல்முறையும் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு இந்திய தேர்தல் ஆணையம் பதிலளிக்க வேண்டும்.

"உள்நாட்டு புலம்பெயர்ந்தோர்" என்ற வரையறையில் தெளிவு இல்லாததோடு கூடுதலாக, "தொலைதூரம்" என்பதை நிர்ணயிப்பதிலும் தெளிவில்லை. முன்வைப்பின் சட்டபூர்வ தன்மைக்கு, இந்த இரண்டு வரையறைப் பிரச்சனைகளும் சட்டரீதியாக மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும். கூடுதலாக, தொலைதூர வாக்களிக்கும் இடங்களில் "மாதிரி நடத்தை விதிகள்" செயல்படுத்தப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லாததும் அதை அமல்படுத்தும்போது நியாயமற்ற தேர்தல் நடைமுறை

கள் ஊக்குவிக்கப்படவும் இந்த முன்மொழிவு வழிவகுக்கும்.

இந்த முன்மொழிவில் உள்ள வெளிப் படையான வரையறை ஓட்டைகளையும் நியாயமற்ற தேர்தல் நடைமுறைகளின் மோசமான சாத்தியப்பாடுகளையும் கணக்கில் கொண்டால், இதனை அவசரமாகக் கொண்டுவருவது தேவை யற்றதும் செயற்கையானதுமாகும். இவற்றில் எதற்கும் தீர்வு காணாமல், இந்தியத் தேர்தல் ஆணையம் நேராக ஒரு தொழில்நுட்பத் தீர்வை நோக்கிச் சென்றுள்ளது. இது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. மேலும், இது புலம் பெயர்ந்தோருக்கு அதிக அளவிலான இணைய கல்வியறிவையும் தொழில்நுட்ப அறிவாற்றலையும் முன்வைக்கும் தொழில்நுட்பமாகும். பெரும்பாலான புலம் பெயர் தொழிலாளர்கள் குறைந்த அளவே, இணையக் கல்வி உட்பட, கல்வியறிவையே பெற்றுள்ளனர். இதை திட்டமிடப்படாத பொது முடக்கத்தின் போது புலம் பெயர்ந்தவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப, ரயில்களுக்கு இணையதளம் மூலம் பதிவு செய்ய அவர்கள் பட்ட கஷ்டத்திலிருந்து ஒருவர் தெரிந்து கொள்ள முடியும். முதன்மையாக இது ஒரு சமூக, சட்டபூர்வ பிரச்சினையாகும். அதற்கு தொழில் நுட்ப ரீதியான தீர்வுகளைக் கண்டறிய முயற்சிக் கக் கூடாது என இந்தியத் தேர்தல் ஆணையத்தை இகக(மாலெ) வலியுறுத்துகிறது.

இந்த திடீர் முன்மொழிவு, மாற்றிய மைக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திரங் களைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியதாகும். அதேவேளை மின்னணு வாக்குப்பதிவு எந்திரங் களின் நம்பகத்தன்மை குறித்த பெரும் கவலை களும் ஜனநாயகக் கொள்கைகளுக்கு அவை பொருத்தப்பாடுடையதுதானா என்பதும் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன. சமீபத்திய குஜராத் சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவின்போது கடைசி நேரத்தில் சந்தேகத்திற்கிடமான வாக்குப் பதிவு நடைமுறைகள் காணப்பட்ட நிலையில், இக் கேள்வி மீண்டும் முன்னுக்கு வந்துள்ளது. இந்த தீர்க்கப்படாத பிரச்சனைகள் தொலைதூர வாக்குப்பதிவு முறையிலும் இருக்கும் என்பது வெளிப்படையானது. இது மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்த சந்தேகங்களை அதிகப்படுத்தவே செய்யும்.

பிராந்தியக் கட்சிகளின் தேர்தல் வாய்ப்பு களை மழுங்கடிக்க ஒரே சமயத்தில் தேர்தல்கள் என்று சொல்வதைப் போலவே இதுவும் மற்றொரு நாடகம்தான் என்பது வெளிப்படை. குறிப்பாக, இது புலம்பெயர்ந்த வாக்காளர்க ளிடையே பரப்புரை செய்வதற்கான பிராந்தியக் கட்சிகளின் திறனைப் பாதிக்கிறது. அதேபோல, நாடு முழுவதும் உள்ள தொலைதூர வாக்குச் சாவடிகளில் தேவையான வாக்குச் சாவடி முகவர்கள், வாக்கு எண்ணும் இடங்களில் முகவர்களை ஏற்பாடு செய்வதில் பிராந்தியக் கட்சிகள் சிரமங்களை எதிர்கொள்வார்கள்.

மக்களிடையே/வாக்காளர்களிடையே பரப்புரை செய்வதற்கும் தொடர்புகொள்வதற்கும் அரசியல் கட்சிகளின் உரிமைகளை இந்த முன்மொழிவு கடுமையாக மீறுகிறது என்பதை இந்தியத் தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கத் தவறி விட்டது என்பது நினைத்துப் பார்க்க முடியாத தாகும். உண்மையில் இந்த முன்மொழிவு பிராந்தியக் கட்சிகளின் செல்வாக்கையும் பொருத்தப்பாட்டையும் கீழ்நிலைப்படுத்தும் திசையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றொரு நடவடிக்கையாகும். அனைவருக்கும் சம வாய்ப்பை உறுதி செய்ய வேண்டியது இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பாத்திரமாகும். ஆனால் இந்த முன்மொழிவின் படி, தொலைதூர வாக்களிப்புக்கான ஒட்டுமொத்த செயல்முறையும் அதற்கு எதிரானதாகவே உள்ளது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் முன் மொழிவானது அடிப்படை ஜனநாயகக் கோட்பா டுகளின்படி கடைப்பிடிக்கப்பட வேண்டிய எந்தவொரு வாக்களிப்பு செயல்முறைக்கும் முரணானதாகும். அவசரகதியில், வெளிப்படைத் தன்மையின்றி இந்தியத் தேர்தல் ஆணையம் இதனை செயல்படுத்தும் விதமானது ஒட்டு மொத்த முன்மொழிவையும் கேள்விக்குள் ளாக்குகிறது. வாக்காளர் பங்கேற்பை அதிகரிப்பது தான் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒரே குறிக்கோள் என்றால், குறைவான வாக்குப்பதிவுக் கான முக்கிய காரணங்களான நகர்ப்புரத்தினரின் அக்கறையின்மை, இளைஞர்களின் அக்கறை யின்மை போன்றவற்றை தீர்ப்பதற்கான வேறு வழிகள் குறித்து ஆராய வேண்டும். விரக்தி மனப்பான்மையும் குறைவான வாக்குப்பதிவுக் குக் காரணம் என்பதும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். தேர்தல் ஆணையத்தின் இந்த முன்மொழிவானது நியாயமற்ற தேர்தல் நடை முறைகளையும் ஊழலையும் ஊக்குவித்து, சுதந்திரமான, நேர்மையான தேர்தல்கள் என்ற கருத்தையும் கீழ்நிலைப்படுத்தும். ❑

**லிபரேஷன், மார்ச்–ஏப்ரல் 2023**

**தமிழாக்கம் – செந்தில்**

# கனியாமூர்-வேங்கை வயல் முதல் அம்பை-உடன்குடி வரை

**ரமேஷ் கணபதி**

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது பாரபட்சமின்றி கடும் நடவடிக்கையை துரிதமாக எடுப்போம்... இந்த அரசைப் பொறுத்தவரை, குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், அதிலும் குறிப்பாக பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மனித குலத்துக்கே ஓர் அவமானச் சின்னம் என்று கருதுகிறோம். அந்த வகையில் இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது பாரபட்சமின்றி, கடுமையான நடவடிக்கையை துரிதமாக எடுப்போம் என்று ஏப்ரல் 12 அன்று சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார். கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தில் 6 வயது பள்ளிச் சிறுமியிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்ட திமுக கவுன்சிலரும் பள்ளிக் கூடத்தின் தாளாளருமான பக்கிரிசாமியைக் குறிப்பிட்டுப் பேசியபோது முதல்வர் இவ்வாறு கூறினார். அந்த பக்கிரிசாமி கட்சியை விட்டு நீக்கப்பட்டிருக்கிறார். போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார். நல்லது நடந்துள்ளது. அடுத்தடுத்த நடவடிக்கைகளைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**திமுக அரசும் கார்ப்பரேட் முதலாளிகள் ஆதரவு, தொழிலாளர் விரோத, சாதியாதிக்க சக்திகள் ஆதரவு நிலைபாட்டையே மேற்கொண்டு வருகிறது என்பதையே நடக்கும் நிகழ்வுகள் காட்டுகின்றன.**

ஏனென்றால், கள்ளக்குறிச்சி மாவட்டம் கனியாமூரில் மர்மமான முறையில் இறந்துபோன ஸ்ரீமதியின் மரணத்திற்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லையே. மாணவியின் மரணத்திற்கு பாலியல் வன்கொடுமையோ, கொலையோ காரணமல்ல என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி இளந்தரையன், குற்றவாளிகளுக்கான பிணை மனு விசாரணையின் போதே தனது கருத்தை வெளியிட்டார். அப்போதே இது விசாரணையின் போக்கைப் பாதிக்கும் என்று நீதியை, நியாயத்தை, ஜனநாயகத்தை விரும்பும் அனைவரும் கூறினார்கள். உயர்நீதிமன்றம் அவ்வாறு சொன்னது என்றால், அதற்கு முன்பே தமிழ்நாடு காவல்துறை தலைவர் சைலேந்திரபாபு, பள்ளி நிர்வாகத்தினர் மீது எவ்வித தவறும் இல்லை என்பது போன்று அறிவித்தார். விசாரணை துவங்குவதற்கு முன்பே, மாணவி படித்த பள்ளியைச் சேர்ந்தவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று கூறியது விசாரணையின் போக்கையே மாற்றியது. இறந்த மாணவியின் தாயார் மீது குற்றம் சுமத்தப்பட்டது. திட்டமிட்டு கலவரங்கள் உருவாக்கப்பட்டன. கலவரக்காரர்கள் கருப்புச் சட்டை அணிந்து வந்தார்கள் என்று சொல்லி, மாணவிக்காக நீதி கேட்டுப் போராடியவர்களை கலவரக்காரர்கள் என்று முதல்வரின் கையில் உள்ள தமிழ்நாடு காவல்துறை கைது செய்தது. மாணவியின் மரணத்திற்கு காரணமான உண்மைக் குற்றவாளிகள் சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமின்றி, கலவரத்தால் 25 கோடி ரூபாய் பள்ளிக்கு இழப்பு. அதனால் பள்ளியைத் திறக்க வேண்டும் என்று நீதிமன்றத்தை அணுகினர். உயர் நீதிமன்றமும் 10 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கடலூர் மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவு போட்டது.

ஆனால், இன்றைய நாள் வரை குற்றவாளிகள் மீது

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. இரண்டு வாரங்களுக்குள் தாக்கல் செய்யப்படும் என்று காவல்துறை சொன்னது. ஆனால், பல வாரங்கள் போய்விட்டன. இன்று வரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. இந்த வழக்கும் பெண் குழந்தை சம்பந்தப் பட்டதுதானே! ஏன் இன்னும் குற்றவாளிகள் மீது குற்றப்பத்திரிகையே தாக்கல் செய்யப்படவில்லை என்றால், எப்போது தாக்கல் செய்து, எப்போது விசாரணை நடத்தி எப்போது குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்? முதல்வர் கூறிய துரிதமான நடவடிக்கை என்பது இதுதானா? திமுக கவுன்சிலர் பக்கிரிசாமி மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட முதல்வர் அவர்கள், கனியாமூர் பள்ளி நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் பாஜகவுக்கு நெருக்கமானவர்கள் என்கிறபோது, பாசிச பாஜகவை ஒழித்துக் கட்டும் முயற்சியில், சமூக நீதியை உயர்த்திப்பிடிப்பதில் முதன்மை யாக நிற்கும் திமுக அரசு இன்னும் வேகமாக அல்லவா நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். மாறாக சொந்தக் கட்சியினர் மீது காட்டும் வேகத்தைக் காட்டிலும் பாஜகவினர் மீது காட்டப்படும் வேகம் குறைவாகவே உள்ளது என்பது அப்பட்டமாகவே வெளிப்படுகிறது. பாசிச பாஜக எதிர்ப்பு என்பது வெளி வேஷமா? என்று மக்கள் திமுகவைப் பார்த்து சந்தேகப்பட மாட்டார்களா?

## சாதி, மதம் பார்த்து வருமா சமூக நீதி?

கனியாமூரில் குற்றவாளிகள் சங்கிகளுக்கு நெருக்கமானவர்கள் என்பதால் ஸ்ரீமதிக்கான நீதி தள்ளிக் கொண்டே போகிறதென்றால், வேங்கை வயல் குற்றவாளிகள் ஏன் இன்னும் கைது செய்யப்படவில்லை? புதுக்கோட்டை மாவட்டம் வேங்கை வயலில் தலித் மக்கள் பயன்படுத்திய குடி தண்ணீர் தொட்டியில் வண்டிக் கணக்கில் மலத்தைக் கலந்த குற்றவாளிகள் ஏன் இன்னும் கைது செய்யப்படவில்லை? உண்மைக் குற்றவாளிகள் இடைச் சாதியைச் சேர்ந்தவர்கள், ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதுதானே காரணம். ஆதிக்க சாதியினர் வாக்கு வராமல் போய்விடக் கூடாது என்பதுதானே காரணம்? குடி தண்ணீர் தொட்டியில் மலம் கலந்துள்ள விசயம், வேங்கை வயல் குழந்தைகள் வியாதி வந்து படுத்த நிலையில், அவர்களின் நோய்க்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தபோதுதானே அவர்கள் குடித்த நீரில் மலம் கலந்துள்ளது என்கிற விவரமே தெரியவந்தது.

தொட்டியில் மலம் கலந்துள்ள விவரம் எனக்கு தெரிந்தவுடனேயே அந்தத் தொட்டியை சுத்தம் செய்ய உத்தரவிட்டதாக முதல்வர் அவர்கள் சட்ட சபையில் கூறினார்கள். ஆனால், அந்தத் தொட்டியை இடித்துத் தள்ளிவிட்டு அனைத்து சாதியினரும் பயன்படுத்தும் தொட்டியை வேங்கைவயலைச் சேர்ந்த தலித் சமூக மக்களும் பயன்படுத்துவார்கள் என்று அறிவித்து அதன்படி நடவடிக்கை எடுக்க சமூக நீதி காக்கும்! திமுக அரசை எது தடுக்கிறது.?

குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நடவ டிக்கை எடுப்பதாகச் சொல்லிக் கொண்டு தமிழ்நாடு காவல் துறை என்ன செய்தது? வேங்கை வயல் கிராமத்தைச் சேர்ந்தவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று தாங்கள்தான் தங்கள் தண்ணீர் தொட்டியிலே மலத்தைக் கலந்தோம் என்று ஒப்புக் கொள்ளச் சொல்லி துன்புறுத்தியது. பாதிக்கப்பட்டவர்கள் மீதே பழி போடும் பாஜக-சங் கும்பல்களின் மோசமான நடவடிக்கை அல்லவா இது? பாஜக ஆளுகின்ற மாநிலங்களில், பெண்கள், தலித்துகள் இஸ்லாமியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. பெண்கள் பாலியல் வன்புணர்வுக்குள்ளானால், பாதிக்கப்பட்ட அந்த பெண் மீதே குற்றம் சுமத்தி, குற்றவாளிகளைத் தப்பிக்கச் செய்வதுதானே நடந்து கொண்டிருக்கின்றது. தலித்துகள், இஸ்லாமியர்கள் மீது, பசுக்குண்டர்கள் வீண் பழி சுமத்தி தாக்குதல் நடத்துகிறார்கள். அவர்களுக்கு ஆட்சியில் உள்ளவர்களும் அவர்களின் ஆசி பெற்ற காவல்துறையினரும் துணை போகிறார்கள். அதே நிலைதான் பெரியார் பூமியில், சனாதனத்துக்கு எதிராக சமூக நீதி காக்க, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக ஆட்சி செய்யும் தமிழ்நாட்டிலும் நடக்கும் என்றால், சமூக நீதி பற்றி பேசுவது வெற்றுப் பேச்சாகாதா? தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றும் செயல் ஆகாதா? வேங்கைவயல் உண்மைக் குற்றவாளிகள் உடன் கைது செய்யப்பட்டு தண்டிக்கப் பட வேண்டும்

மாறாக, வேங்கை வயல் விசயத்திலும் கனியாமூர் பிரச்சனையிலும் உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதை தள்ளிக் கொண்டே போய், மற்ற பிரச்சனைகள் வந்து மக்களை மறக்கடிக்கச் செய்திடும் மோசமான யுத்தியை தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் திமுக அரசும் செய்கிறது என்று சொன்னால், பாசிச பாஜகவிற்கு எதிரான சமூக நீதிக்கான போராட்டத்திற்கு தலைமை தாங்குவதாகச் சொல்வதில் எவ்வித பொருளும் இல்லை.

இதுபோன்ற பிரச்சனைகள் தமிழ்நாடெங்கும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அவை அனைத்தும் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அவர்களின் பார்வைக்கும் வந்து கொண்டுதான் இருக்கின்றன.

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி பேரூராட்சியில் பணியாற்றிய தூய்மைப் பணியாளர் சுடலை மாடனை, ஊராட்சி தலைவியும் அவரது மாமியாரும் அவரின் சாதியைப் பற்றி இழிவாகப் பேசி திட்டியதால், தற்கொலை செய்து கொண்டார். சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் திமுகவைச் சேர்ந்தவர்கள். அதில் பேரூராட்சியின் முன்னாள் தலைவியான ஆயிஷா 23 நாட்கள் தலைமறைவிற்குப் பின்னர் கடந்த ஏப்ரல் 10ம் தேதி காவல் நிலையத்தில் சரணடைந்தார். ஒரு வன்கொடுமைக் குற்றவாளி சரணடைந்தபோது, அவரைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றார்கள் திமுக நிர்வாகிகள். திமுக பேசும் சமூக நீதி இதுதானா? ஆயிஷா தனக்கு நெஞ்சு வலி என்று சொல்லி கைதுக்குப் பின்னரும் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று பார்க்கின்றவர்கள் சொல்கிறார்கள்.

சென்னை நங்கநல்லூர் கோயில் தீர்த்தவாரி நிகழ்ச்சியின் போது நீரில் மூழ்கி இறந்துபோன அர்ச்சகர்கள் குடும்பங்களுக்கு நிதி வழங்குவது அவர்கள் குடும்பத்தினருக்கு வேலை கொடுப்பது எல்லாம் கண்டிப்பாகச் செய்யப்பட வேண்டியது. அவர்கள் இறப்பிற்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் அஞ்சலி செலுத்தியதும்கூட தவறில்லை. ஆனால், இதேபோல் தலித் மக்கள் மரணமடைந்தால், உழைக்கும் தொழிலாளர்கள் பட்டாசு ஆலைகளில், கட்டுமானப் பணியின் போது மரண மடைந்தால், கடலுக்குள் செல்லும் மீனவர்கள் செத்தால், இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டால், அப்போதெல்லாம் சட்டப் பேரவையில் அஞ்சலி செலுத்துவது கிடையாதே ஏன்?. சமூக நீதி கூட சாதி, மதம் பார்த்துதான் வருமா?

தீர்த்தவாரியில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முதல்வர் அவர்கள் வேங்கை வயல் கிராமத்திற்கு இதுவரை போகவில்லையே ஏன்? பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் என்று பார்த்து, அவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப் படுவது தமிழ்நாட்டிலும் இருந்து கொண்டிருப் பதுதான் கொடுமையிலும் கொடுமையாகும். அரசு அலுவலகங்களில், மருத்துவமனைகளில், உள்ளாட்சி அமைப்புகளில் என்று மட்டுமல்ல, பள்ளிக் கூடங்களில் மாணவர்கள், சக மாணவர்களால் மட்டுமல்ல, ஆசிரியர்களாலும் வன்கொடுமைக்குள்ளாக்கப் படுகிறார்கள்.

## மனித உரிமை மீறலும்கூட சமூக நீதிக்கு எதிரானதே

சமூக நீதி பேசிக் கொண்டே சமூநீதியை மீறுகிற நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும் அதேவேளை மனித உரிமை மீறல்களும் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அதிமுக ஆட்சியில், ஸ்டெர்லைட், சாத்தான்குளம் என்று காவல்துறையினரின் அத்துமீறல் அராஜகம் கண்மூடித்தனமாக இருந்தது என்றால், திமுக ஆட்சியிலும் அவை அதிகரித்துக் கொண்டிருக்கின்றன என்பதுதான் அதிர்ச்சியளிக்கும் விசயமாகும். காவல் நிலைய கொட்டடித் தாக்குதல்கள், காவல் நிலைய கொட்டடி மரணங்கள் பலவும் வெளியே தெரியாமல் நாளும் நடந்து கொண்டிருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் காவல் உதவி கண்காணிப் பாளராகப் பணிபுரிந்த பல்வீர் சிங், விசாரணைக் கைதிகளின் பல்லை உடைத்துள்ளார். சிலரின் உயிர்த் தளத்தை கசக்கி கொடுமைப் படுத்தியுள்ளார். பல்வீர் பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. இவர் பணியில் சேர்ந்து 6 மாதங்களில் சுமார் 45க்கும் மேற்பட்டவர்களை விசாரணைக்காக அழைத்துச் சென்று கூழாங்கற்களை வாயில் போட்டு கடிக்கச் சொல்லியும் கற்கள் வாயில் இருக்கும் போதே அவர்களின் கன்னத்தில் இரு கைகளாலும் ஓங்கி அடித்தும், கட்டிங் பிளேயர் கொண்டும் பற்களை பிடுங்கியுள்ளார். பல்வீர் சிங்கின் இந்த மனித உரிமை மீறல் சித்தரவதையானது அவரின் கீழ் வேலை பார்ப்பவர்களுக்கு தெரிந்து இருந்தாலும் மேலதிகாரிக்குக் கட்டுப்பட்டு கண்டு கொள்ளாமல் இருந்தார்கள் என்றால், தங்கள் உளவுத் துறையினர் மூலம் இச் செயலை நன்கு தெரிந்து கொண்டே கண்டு கொள்ளாமல் இருந்தார்கள் பல்வீர் சிங்கிற்கு மேலிருந்த காவல் துறை அதிகாரிகளும் மாவட்ட நிர்வாகத்தினரும் என்பதுதான் மிகவும் வருத்தத்திற்குரியதும் கண்டிக்கத்தக்கதுமாகும்.

இப்பிரச்சனை வெளியே வந்ததும் உடன் நடவடிக்கை எதுவும் பல்வீர் சிங் மீது எடுக்கப்படவில்லை. இடதுசாரிக் கட்சிகள், ஜனநாயக அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள் நடத்திய போராட்டத்திற்குப் பின்னர்தான்,

முதலில் பல்வீர் சிங் தற்காலிகப் பணி நீக்கம் மட்டும் செய்யப்பட்டார். கண் துடைப்புக்காக, சேரன்மகாதேவி சார் ஆட்சியரின் விசாரணைக்கு உத்தரவிட்டார்கள். பல்வீர் சிங்கும் சேரன்மகா தேவி சார் ஆட்சியரும் ஒரே நேரத்தில் பயிற்சி மேற்கொண்டவர்கள். அது மட்டுமின்றி, பாதிக்கப்பட்டவர்களை எல்லாம் காவல் துறையினர் மிரட்டி, (வழக்கம்போல) பாத்ரூமில் வழுங்கி விழுந்ததில் பல் உடைந்து போனது என்று சொல்ல வைத்தார்கள். பலரைப் பார்த்து பல் கட்டுவதற்கு காசு தருகிறோம் சாட்சி சொல்ல வரவேண்டாம் என்று தடுத்தார்கள். இந்தச் சூழ் நிலையில், இகக(மாலெ) ஆரம்பத்திலேயே கூறியதுபோல், பணியில் இருக்கும் நீதிபதி ஒருவரின் தலைமையின் கீழ் பல்வீர் விசயத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவருடன் பணியில் இருந்த கீழ் அதிகாரிகள் மட்டுமின்றி, உயர் அதிகாரிகள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர் வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பல்வீர் சிங் உள்ளிட்ட அனைத்து காவல் அதிகாரிகளும் காவலர்களும் பணி நீக்கம் செய்யப்பட்டு, அவர்கள் மீது கொலை முயற்சி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் முன் வைக்கப்பட்டது.

தற்போது மாவட்ட காவல் கண்காணிப் பாளராக இருந்த சரணவனும் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார், சில கீழ் மட்ட அதிகாரிகளும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். எதிர்ப்புக் குரல் வலுத்ததைத் தொடர்ந்து, ஐஏஎஸ் அதிகாரி அமுதா தலைமையில் விசாரணை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. முதல் கட்ட விசாரணையை அமுதா ஐஏஎஸ் அவர்கள் துவங்கியுள்ளார்கள். பாதிக்கப்பட்ட எவரும் விசாரணையில் சாட்சி சொல்ல வரவில்லை. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரோ, ஏற்கனவே சேரன்மகாதேவி சார் ஆட்சியர் முன்பு சாட்சியமளித்தவர்கள் திரும்ப வரவேண்டிய தேவையில்லை, விரும்பினால் வரலாம் என்று அறிவிக்கிறார். இது மறைமுகமாக சாட்சியமளிக்க வருபவர்களைத் தடுக்கும் செயலாகும். பாதிக்கப்பட்டவர்கள் காவல்துறை யினருக்கு எதிராக சாட்சியமளிக்க மிகவும் பயப்படும் நிலையில், தமிழ்நாடு அரசுதான் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும். காவல்துறையினர் பெரும்பாலும் காவல் துறையினருக்கு ஆதரவாகவே செயல் படுவார்கள் என்பது நன்கு தெரிந்த ஒன்று. ஆகையால், பதவியில் இருக்கும் மாவட்ட நீதிபதி தலைமையில் விசாரணை நடத்தப்பட வேண்டும். மனித உரிமை வழக்கறிஞர் செம்மணி காவல் அதிகாரிகளால் தாக்கப்பட்ட வழக்கில், சிபிசிஐடி விசாரணை மேற்கொண்டது. ஆனால், வழக்கில் உண்மையில்லை (Mistake of Facts) என்று சொல்லி இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. விசாரணை நேர்மையாக நடக்க அரசு உறுதி செய்ய வேண்டும்.

காவல்துறையில் மட்டுமின்றி, எல்லா துறைகளிலுமே உயர் அதிகாரிகளின் மனித உரிமை மீறல்கள், அராஜக, அத்துமீறல்கள் மாநிலம் முழுவதும் காணப்படுகின்றன. மதுரை மாவட்டம் மையிட்டான்பட்டி நாகலட்சுமி நூறு நாட்கள் வேலை பொறுப்பாளராக இருந்தார். அவருக்கு 12 வயதிலிருந்து 6 மாதம் வரை ஐந்து பெண் குழந்தைகள். அவரை ஊர் கவுன்சிலர் களும் எழுத்தர் மற்றும் செயலர் வேலையை விட்டு போகச் சொல்லி மிரட்டிய தால், பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த அவர் இரண்டு குழந்தைகளை பேருந்திலேயே விட்டுவிட்டு ஓடும் பேருந்தில் இருந்து குதித்து இறந்துவிட்டார். இதில் செயலர் கைது செய்யப் பட்டுள்ளார். பத்திரப்பதிவுத்துறை மந்திரி குடும்பத்தினரைப் பார்த்துள்ளார். 5 லட்ச ரூபாய் நிதி கொடுத்துள்ளார். எல்லாம் முடிந்த பின்னர் இதனால் என்ன பயன்? முறையில்லாமல் நடக்கும் திட்ட வேலைகளினால் ஆட்சியில் இருப்பவர்களும் அதிகாரத்தில் இருப்பவர்களுமே ஆதாயம் பார்க்கிறார்கள். அன்றாடங்காய்ச்சிகள் வாழ்வு கேள்விக்குள்ளாகிக் கொண்டே இருக்கின்றது. இதுபோன்ற நடவடிக்கைகள் தொடராமல் இருக்க வேண்டும் என்றால், பாசிச பாஜகவின் உழைக்கும் மக்கள் விரோத, கார்ப்பரேட் முதலாளிகள் ஆதரவு, மதவெறிக் கொள்கைகள் தமிழ்நாட்டிற்குள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தமிழ்நாடு அரசின் கடமை. ஆனால், திமுக அரசும் கார்ப்பரேட் முதலாளிகள் ஆதரவு, தொழிலாளர் விரோத, சாதியாதிக்க சக்திகள் ஆதரவு நிலைபாட்டையே மேற்கொண்டு வருகிறது என்பதையே நடக்கும் நிகழ்வுகள் காட்டுகின்றன. ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறாத நிலையில், மக்கள் போராட்டக் களத்தில் இறங்குவது தவிர்க்க முடியாததாகும். கனியாமூர், வேங்கைவயல், அம்பை, உடன்குடி, மையிட்டான்பட்டி என நீண்டு கொண்டே போவது சமூக நீதி ஆட்சிக்கு எடுத்துக் காட்டாகாது. ❑

# மதுச்சேரியை மக்கள் புதுச்சேரியாக மாற்றப் போராடுவோம்!

விஜயன்

**பா**ஜகவின் பாசிச ஆட்சியில் மாநில ஆளுநர்கள் தொடர்ச்சியாக மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட அரசுகளை செயல்பட விடாமல் தொடர் சர்ச்சைகள் ஏற்படுத்துவது அதிகரித்து வரும் சூழலில், பல போராட்டங்களுக்குப் பின்னால், தற்போது தமிழ்நாட்டிலும் தெலுங்கானாவிலும் ஆளுநர்களால் பல மாதங்களாக கிடப்பில் போடப்பட்டிருந்த ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுக்கு தடை உள்ளிட்ட கோப்புகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

புதுவை முதல்வர் ரங்கசாமி "புதுச்சேரிக்கு உண்மையான விடுதலை கிடைக்கவில்லை" என்றும் எல்லாவற்றுக்கும் மத்திய அரசை கேட்கும் நிலை மாற வேண்டும்" என்று நடந்து முடிந்த சட்டசபை கூட்டத் தொடரில் அதிருப்தியை வெளியிட்டார். கடந்த ஓராண்டாக பல சமயங்களில் இதுபோன்று பேசியிருக்கிறார். தமிழகம் போன்ற பெரிய மாநில அரசின் விவகாரங்களிலேயே மூக்கை நுழைத்து வரும் மத்திய பாரதிய ஜனதா அரசின் ஆக்டோபஸ் பிடிக்கு புதுச்சேரி எம்மாத்திரம். தெலுங்கானா வில் தொடர் புறக்கணிப்புக்கு ஆளாகி புதுவையே கதி என்று இருக்கும் பொறுப்பு துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தர ராஜனோ, தன் ஆளுநர் அதிகாரத்தை வரம்பு மீறி பயன்படுத்தி சூப்பர் முதல்வராக தன்னை காட்டிக் கொள்வதை தொடர்ந்து செய்து வருகிறார். மாநில அமைச்சரவை ஒப்புதல் இன்றி ஊடகங்களில் இவரே திட்டங்களை அறிவிப்பது, சாராய ஆலைகளுக்கு பணம் பெற்றுக் கொண்டு அனுமதி அளித்தது என இவர் மீது குற்றச் சாட்டுகள் நீள்கின்றன.

**மாநில உரிமைகள் பற்றி பேசும் முதல்வர் ரங்கசாமி, பலபத்தாண்டு காலமாக உள்ள, வேர்காலமட்ட ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் உள்ளாட்சித் தேர்தலை வேண்டுமென்றே காலதாமதப்படுத்துகிறார்.**

ஆனால் புதுச்சேரி ஏதோ சொர்க்கபுரி போலவும் மக்கள் எல்லாம் கொண்டாட்டத்தில் எப்போதும் திளைப்பது போலவும் சிலாகிக்கும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திருமதி தமிழிசை தெலுங்கானாவிலும் புதுச்சேரியிலும் தேசியக்கொடி ஏற்றியதை பெருமையாகப் பேசுகிறார். அவருக்கு வேண்டுமானால் மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் புதுச்சேரி உழைக்கும் மக்களுக்கு எந்த விதத்திலும் பயன் இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக புதுச்சேரி மாநிலத்திற்கு என்று ஒரு முழுநேர துணைநிலை ஆளுநரை நியமிப்பதற்குக் கூட மோடி அரசாங்கத்திற்கு எண்ணமில்லை. மாறாக, தொடர்ந்து ஒன்றிய அரசின் திட்டங்களின் சோதனைக் களமாய் புதுச்சேரி மாற்றப்பட்டிருக்கிறது.

ரேஷன் பொருட்கள் விநியோகம் நிறுத்தம் தொடங்கி மின்துறையை தனியார் மயமாக்கம் வரை புதுச்சேரி சோதனைக்குள்ளாக்கப் படுகின்றது. மின் கட்டண உயர்வு மக்களை விழிப்பிதுங்க செய்துள்ளது. 100 நாள் வேலை இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. சிபிஎஸ்சி பாடத்திட்ட அறிமுகம் என்று சொல்லி இந்தி, சமஸ்கிருதம் நுழைக்கப் படுகிறது. பூண்டு, வெங்காயம், முட்டை இல்லாத சத்துணவு(?) வழங்கப்படுகிறது.

புதுச்சேரி மாநிலத்தில் வேலைவாய்ப்புகள் முழுவதுமாக

இல்லாமல் ஆகிவிட்டது. மக்களுக்கு பெரு மளவில் வேலை அளித்து வந்த பஞ்சாலைகள் முழுவதுமாக மூடப்பட்டு விட்டன . புதுச்சேரி சேதராப்பட்டு உள்ளிட்டு, மாநிலம் முழுவதும் பல நூறு ஆலைகள் மூடப்பட்டு, சொற்ப எண்ணிக்கையிலேயே ஆலைகள் இயங்கி வருகின்றன. கரசூரில் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்க கிட்டத்தட்ட 800 ஏக்கர் நிலம் கையகப்ப டுத்தப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாக எவ்வித நடவடிக்கையும் இன்றி கிடக்கிறது.

புதுச்சேரி மாநிலத்தில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டம் தடையின்றி இருக்கிறது. இதனால் கொலை, பாலியல் வன்முறை உள்ளிட்ட குற்றச் சம்பவங்கள் அன்றாட நிகழ்வாகிவிட்டன. இதை கண்டு கொள்ளாத ரங்கசாமி அரசு, மதுபார்களின் எண்ணிக்கையை 500லிருந்து தற்போது 900ஆக அதிகரித்துள்ளது. இன்னும் பல பார்களுக்கு அனுமதி வழங்கப்பட உள்ளது. மேலும் சுற்றுலாப் பயணிகள் குடித்துக்கொண்டே செல்ல பீர் பஸ் வந்துள்ளது. தற்போது புதுச்சேரி "மதுச்சேரி" ஆகியிருக்கிறது. சீரழிந்த சுற்றுலாக் கொள்கையால் மாநில மக்களை தினம் வதைத்து வருகிறது ரங்கசாமி தலைமையிலான அரசு. இவற்றுக்கு எதிராக இகக(மாலெ) சார்பிலும், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் சார்பிலும் தொடர் இயக்கங்கள் நடைபெறு கின்றன. இன்னொருபுறம் ரேஷன் கடைகள் முழுவதுமாக மூடப்பட்டு அதன் பணியாளர்கள் வீதியில் போராடி வருகின்றனர். பல அரசு சார்பு நிறுவனங்களில் ஊழியர்களுக்கு பல ஆண்டு களாக சம்பளம் வழங்கபடாததால் தொடர் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

புதுவையில் இயங்கிவரும் எல் அண்டு டி போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களோ தொழிலாளர் சட்டங்களைக் காற்றில் பறக்க விடுகின்றன. ஒப்பந்தத் தொழிலாளர் முறைக்கு எதிராகவும் ஓராண்டு காலமாக சட்டக் கூலி, இஎஸ்ஐ, பிஎப் உள்ளிட்ட உரிமைகள் கேட்டு போராடிய நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை எல் அண்டு டி நிறுவனம் பழிவாங்கும் வகையில் பணி நீக்கம் செய்துள்ளது. பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள 289 தொழிலாளர்கள் மீண்டும் வேலை கோரி வீதிகளில் குடும்பத்து டன் ஏஐசிசிடியு தலைமையில் போராடி வருகின்றனர். புதுவையில் தமிழகத்திற்கு கடத்தப்பட்ட இலவச அரிசி பிடிப்பட்ட போது அது உண்பதற்கு இலாயக்கற்ற நிலையில் இருந்தது கண்டு மாலெ கட்சி சார்பில் மக்களைத் திரட்டி போராட்டம் நடத்தியது. ஆனால் முதல்வர் ரங்கசாமியோ மக்களால் கேள்விக்கு உள்ளாக்கப்படும் போதெல்லாம் மாநில அந்தஸ்து எனும் அஸ்திரத்தை வைத்து தப்பித்துக் கொள்ள முயல்கிறார். மாநிலத்திலும் மத்தியிலும் ஒரே கூட்டணி கட்சிகள் இருந்தால் தான் புதுச்சேரி மக்களுக்கு நன்மை உண்டாகும் என ஆருடம் சொல்லி பாஜக கூட்டணியில் இணைந்த ரங்கசாமி தான் இன்று மன உளைச்சலில் உள்ளதாக மக்களைத் திசைதிருப்பி நம்ப வைக்கிறார்.

ஆனால் மாநில உரிமைகள் பற்றி பேசும் முதல்வர் ரங்கசாமி, பலபத்தாண்டு காலமாக உள்ள, வேர்காலமட்ட ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் உள்ளாட்சித் தேர்தலை வேண்டுமென்றே காலதாமதப்படுத்துகிறார். முன்னாள் முதல்வர் நாராயணசாமி கடந்த ஆட்சிக்கு எதிராக கிரண்பேடி செயல்பட்டபோது அதை ரசித்த ரங்கசாமி தான் இப்போது புலம்புவதாக கூறியதோடு ரங்கசாமி வீதியில் இறங்கி போராடத் தயாரா என கேள்வி எழுப்பி உள்ளார்.

ஆனால் கிட்டத்தட்ட 12 ஆண்டுகளுக்கும் மேலாக முதல்வராக பொறுப்பேற்று இருக்கும் ரங்கசாமி, தான் ஆட்சியில் இல்லாத காலங்களில் ஒரு முறை கூட மக்கள் கோரிக்கைகளுக்காக வீதியில் இறங்கிப் போராடியது இல்லை என்பது வரலாறு. மாநில உரிமைகளுக்காக ரங்கசாமி குரலெழுப்புவது உண்மையானால் அவர் முதலில் பாஜக பிடியிலிருந்து வெளியேற வேண்டும். மாளிகையில் பதவி, அதிகார போதையில் திளைக்கும், மக்களை பற்றி சிறு கவலையும் இல்லாத இவர்கள் மாநில அந்தஸ்து கோருவது அவர்களின் சுயலாப அரசியல்.

எந்த புதிய வேலை வாய்ப்பு திட்டமும் உருவாக்கப்படாமல், புதிய வேலை வாய்ப்புகள் ஏதும் இல்லாமல் போதை கலாச்சாரத்தை நோக்கி துரத்தப்படும் இளைஞர்களின் வாழ்க்கை பெரும் இருளாகி வருகிறது, முதல்வரோ இல்லை முன்னாள் முதல்வரோ வீதியில் இறங்கி நமக்காக போராடப் போவதில்லை.

பிரஞ்ச் ஏகாதிபத்தியத்தை இடதுசாரி தொழிலாளர் வர்க்க தலைமையில் விரட்டிய புதுவை மக்கள், பாஜக-ஆர்எஸ்எஸ் ஆதிக்கத்தி லிருந்து விடுபட, நாளும் துன்பத்தில் உழலும் மக்களின் நலனுக்காக, மக்களை ஒன்று திரட்டி, மக்கள் புதுச்சேரிக்காக போராடுவது ஒன்றே தீர்வு. மதுச் சேரியாக மாறியிருக்கும் புதுச் சேரியை மக்கள் புதுச்சேரியாக்கப் போராடுவோம்.

# சேலத்தில் வீட்டு மனைப்பட்டா கேட்டு ஆர்ப்பாட்டம்



*12.4.2023* காலை சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன்பு வீட்டுமனைப்பட்டா கேட்டும் சுற்றுச் சூழலைப் பாதிக்கிற அழிவுத் திட்டங்களைக் கைவிடக் கோரியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தோழர் குபேந்திரன் தலைமை தாங்கினார்.

குறிச்சி கிராமத்து குடியிருப்பு வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா, வெள்ளியம்பட்டி, நிலவாரப்பட்டி கிராம ஏழை விவசாயிகளின் அனுபவத்தில் உள்ள விவசாய நிலங்களுக்கு பட்டா கேட்டும் சுற்றுச்சூழலை மாசுபடுத்துகிற விவசாயத்தை அழிக்கிற அனைத்து திட்டங்களையும் கைவிட வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர்கள். இகக(மாலெ) மாவட்ட செயலாளர் ஆர்.வேல்முருகன், ஏஐகேஎம் மாவட்டச் செயலாளர் வி.அய்யந்துரை, மாநிலக்குழு உறுப்பினர் பி. அன்பு உரையாற்றினர். இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் அ.சந்திரமோகன் சிறப்புரையாற்றினார்.

# அடிப்படை வசதிகள் கேட்டு ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம் அச்சன்புதூர், நெடுவயல் ஆகிய கிராமங்களில் குடிநீர் வசதி, சாலை வசதிகள் கேட்டு இகக(மாலெ) சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் ஐயப்பன், அயூப்கான், ஆவுடையப்பன், வேல்முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தில் அடிப்படை வசதிகளை செய்து தரக் கோரி இகக(மாலெ) சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்பாட்டத்தில் தோழர்கள் முருகன், சகாயம், சிவராமன் உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.



அச்சன்புதூர்



எட்டையபுரம்

# அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனத்தின் மாநில ஊழியர் கூட்டம்




*அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனத்தின் மாநில ஊழியர் கூட்டம் தஞ்சாவூரில் 12.4.2023 அன்று காலையில் மாநிலத் தலைவர் தோழர் கொ.கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் தோழர் இராஜன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கட்டுமான சங்கத்தின் மேனாள் மாநிலத் தலைவரும் இகக(மாலெ)யின் மாநிலச் செயலாளருமான தோழர் என்.கே.நடராஜனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. ஏஐசிசிடியு மாநிலப் பொதுச்செயலாளர் தோழர் கே.ஜி.தேசிகன் துவக்க உரையாற்றினார். கட்டுமான தொழிலாளர் இயக்கத்தை அரசியல் படுத்துவது குறித்த அறிக்கையை சங்க மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் சொ.இரணியப்பன் முன் வைத்தார். தொடர்ந்து ஊழியர் கூட்டத்தில் பங்கேற்ற தோழர்கள் தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். ஏஐசிசிடியு தேசிய தலைவர் தோழர் வீ.சங்கர் பயிற்சிப் பட்டறையின் நோக்கங்கள் குறித்து விளக்கிப் பேசினார். 25.03.2023 அன்று கொல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய நிர்வாகிகள் கூட்டத்தின் முடிவுகளை ஏஐசிசிடியு மாநில துணைத் தலைவர் தோழர் எஸ்.எம்.அந்தோணிமுத்து விளக்கி பேசினார்.*

## ஏஐசிசிடியு மாநில நிர்வாகக் குழுக் கூட்டம்

*ஏஐசிசிடியுவின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் மாநிலத் தலைவர் தோழர் சங்கரபாண்டியன் தலைமையில் 12.4.2023 அன்று தஞ்சாவூரில் நடைபெற்றது. கூட்டத்தில் அகில இந்திய தலைவர் தோழர் வீ.சங்கர் மற்றும் சிபிஐ(எம்எல்) மாநிலச் செயலாளர் தோழர் பழ. ஆசைத்தம்பி ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்.*

*❈ இந்தியாவிலேயே தமிழ்நாட்டில், சென்னையில் தோழர் சிங்காரவேலர் தலைமையில் மே நாள் கொடி ஏற்றப்பட்டு நூறாண்டுகள் நிறைவடைகின்றன. இந்தாண்டு மே நாளை அனைத்து இடங்களிலும் தொழிலாளர்களை பெரும் அளவில் அணிதிரட்டி, தொழிலாளர் விரோத கார்ப்பரேட் ஆதரவு ஒன்றிய மோடி ஆட்சிக்கு எதிரான போராட்ட நாளாக, மோடி ஆட்சியை தோற்கடிக்க சபதம் ஏற்கும் நாளாக, அனுசரிக்க வேண்டும்.*

*❈ மே 6, 2023 அன்று, மாநில அனைத்து தொழிற்சங்கங்களின் முடிவுப்படி திருச்சியில் நடைபெறும் மாநில அளவிலான மாநாட்டில் அதிக எண்ணிக்கையில் மைய மாவட்ட ஊழியர்கள் கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது.*

*❈ மே 7-8 ஞாயிறு, திங்கள் இரு நாட்கள் தர்மபுரியில் மாநிலப் பொதுக்குழு கூட்டமும் ஊழியர் பயிற்சி முகாமும் நடைபெறும்.*

*❈ஜுலை 7 அன்று அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனத்தின் தமிழ்நாடு மாநில பெருந்திரள் மாநாடு கன்னியாகுமரியில் நடக்கும்.*

*❈ ஜுலை 8, 9 ஆகிய இரு நாட்கள், அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனத்தின்* (All India Construction workers' Federation - AICWF) *அகில இந்திய மாநாடு கன்னியாகுமரியில் நடைபெறும்.*

### பெண்கள் விரோத பாஜக மோடி ஆட்சியை வெளியேற்றுவோம்

# அகில இந்திய முற்போக்குப் பெண்கள் கழக மாநில ஊழியர் கூட்டத் தீர்மானம்






அகில இந்திய முற்போக்குப் பெண்கள் கழகத்தின் மாநில ஊழியர் கூட்டம் 16.04.2023 அன்று திருச்சி அருண் ஓட்டலில் நடைபெற்றது. மாநில அமைப்பாளர் ரேவதி, இகக(மாலெ) கட்டுப்பாட்டு ஆணைய உறுப்பினர் கிருஷ்ணவேணி, தேன்மொழி, பிலோமினா, ஈஸ்வரி, மனோன்மணி கொண்ட தலைமைக்குழு கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தியது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

◆"மகளைப் பாதுகாப்போம்" என்று சொல்லும் மோடி ஆட்சி, பெண்கள் விரோத ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. பெண்கள் இயக்கம் போராடிப் பெற்ற உரிமைகளைப் பறித்து வருகிறது. பெண்கள் அதிக அளவில் வேலை செய்துவரும் தேசிய ஊரக வேலைத் திட்டத்தை மோடி அரசு ஒழித்துக்கட்டும் வேலையில் இறங்கியுள்ளது. டிஜிட்டல் வருகைப் பதிவேடு என்ற பேரால், இந்த வேலைத் திட்டத்திலிருந்து பெண்களை வெளியேற்றும் மோடி ஆட்சியின் சதித் திட்டதை முறியடிக்க போராட்டங்களை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. சமீபத்தில் மதுரையைச் சேர்ந்த 5 குழந்தைகளுக்கு தாயான பெண், அவருக்கு வேலை மறுக்கப்பட்டதால் பேருந்திலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். இதற்கு மோடி ஆட்சி தான் பொறுப்பு. நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் 33% இட ஒதுக்கீட்டை நிறைவேற்றாமல் மோடி அரசு மறுத்து வருகிறது. பெண் விடுதலை போராட்டத்தில் முன்னோக்கிச் செல்ல மோடி ஆட்சியை அதிகாரத்திலிருந்து வெளியேற்றும் தொடர் பரப்புரை இயக்கத்தை நடத்துவதென கூட்டம் முடிவு செய்துள்ளது. ஜனநாயகத்தைக் காக்கும் தேசத்தைக் காக்கும் போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் பங்கு பெறுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

◆ பெண்களுக்கு வரவேற்கத்தக்க சில சமூகத் திட்டங்களை திமுக அரசு நிறைவேற்றியிருந்தாலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கத் தவறிவிட்டது. பெண்களுக்கு இன்னும் சொத்துரிமை வழங்க வில்லை. சட்டம் காகிதத்தில் தான் இருக்கிறது. தோள் சீலைப் போராட்டம், வைக்கம் போராட்டம், பெண்களும் அர்ச்சகராகலாம் போன்ற முற்போக்கு மரபுகள் தமிழ்நாட்டில் இருந்தாலும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை நாளும் பெருகி வருகிறது. பள்ளிகள், கலாஷேத்ரா போன்ற கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான வன்கொடுமைகள் பெருகி வருகின்றன. மதுரை எஸ்விஎன் கல்லூரியில் பெண் மாணவர்களுக்கு பாலியல் வன்கொடுமை நடந்து வருகிறது. இதில் மாநில பெண்கள் ஆணையம் தலையிட்டு விசாரணை நடத்திட வேண்டும். இது போன்ற குற்றங்கள் தொடர்வதற்கு காரணம் பொள்ளாச்சி தொடங்கி இதுவரை குற்றவாளிகள் தண்டிக்கப்பட வில்லை என்பதுதான். பெண்களுக்கு அச்சமற்ற சுதந்திரம் வேண்டும் என்று கோரிக்கை வலுத்து வரும் வேளையில் குற்றவாளிகள் அச்சமின்றி திரிவதுதான் காரணம். சிறுமிகளுக்கு எதிரான குற்றங்களில் 5440 வழக்குகள் இன்னும் நிலுவையில் இருப்பதே மிக மோசமான ஒரு எடுத்துக்காட்டு.

கல்வி நிறுவனங்களில், பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பை உறுதி செய்யவும் குற்றவாளிகள் விரைந்து தண்டிக்கப் படவேண்டியதை உறுதி செய்ய வலியுறுத்தி மாநில மகளிர் ஆணையத் தலைவரையும் முதலமைச்சரை சந்தித்து வலியுறுத்தவும் டாஸ்மாக் கடைகளை முழுவதுமாக மூடவேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

◆ மே மாதத்தில் பெண்கள் கழக உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் நடத்துவது, அதைத் தொடர்ந்து மாவட்ட மாநாடுகள் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. மனுதர்ம எதிர்ப்பு சிறப்பு மாநாடு நடத்துவது ஆண்டு இறுதியில் பெண்கள் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு நடத்துவதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.04.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# அம்பேத்கரின் 133வது பிறந்த நாள்
















# உறுதியேற்பு நிகழ்ச்சிகள்

Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh